
ஜூன் 2006

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



இட ஒதுக்கீடு எதிர்ப்பு:

மீண்டும் தலைதூக்கும்

# பார்ப்பனத் திமிர்

படிப்பகம்

www.padippakam.com

# தாழ்த்தப்பட்ட மக்களின் உயிரைவிட காகித வாக்குச் சீட்டு பெரிதா?

# வன்னிய சாதிவெறியர்களைக் காக்கும் 'ஜனநாயகம்'

தமிழக சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக விருத்தாசலம் தொகுதிக்கு உட்பட்ட முகாசபரூர் என்ற கிராமத்தில், 300-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டோர் வாந்தி-பேதி நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். குடிநீரில் சாக்கடை கழிவுநீர் கலந்ததால் வாந்தி-பேதி ஏற்பட்டதாக உள்ளூர் பத்திரிகைகள் வாந்தியெடுத்தன. ஆனால், முகாசபரூர் கிராம தாழ்த்தப்பட்ட மக்களோ, தங்களை ஓட்டுப் போட விடாமல் தடுப்பதற்காக வன்னிய சாதி வெறியர்கள் குடிநீரில் விஷம் கலந்திருக்கக் கூடும் எனக் குற்றஞ் சுமத்துகின்றனர்.

இதற்கு ஆதாரமாக, வன்னிய சாதி வெறியர்கள் ஒவ்வொரு தேர்தலின் பொழுதும் தங்களை ஓட்டுப் போடாமல் தடுக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததையும்; 2004-இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது, தாழ்த்தப்பட்டோருக்குக் குடிநீர் வழங்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் மின் மோட்டார் அறையில் உயிருடன் நாகப்பாம்பைக் கட்டித் தொங்க விட்டதையும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், ''இதுவரை ஆதிக்க சாதியினர் வசிக்கும் பகுதிகளில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்றுதான் நாங்கள் ஓட்டுப் போடும் நிலை இருந்து வந்தது. இந்தச் சட்டமன்றத் தேர்தலின் பொழுது, நாங்கள் வசிக்கும் பகுதியிலேயே தனி வாக்குச்சாவடி அமைக்க வேண்டும் எனக் கோரி, அதில் அடைவதில் நாங்கள் வெற்றியும் பெற்று விட்டோம். இதனால் கூட, ஆதிக்க சாதி வெறியர்கள் ஆத்திரமடைந்து, குடிநீரில் நஞ்சைக் கலந்திருக்கலாம்'' என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.


இப்பகுதியில் செயல்பட்டு வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி மற்றும் மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த தோழர்கள் இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு, மக்களின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க நேரடி விசாரணைகளை நடத்தினர். முகாசபரூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்துதான் குடிநீர் கொண்டு வரப்படுகிறது. இந்த இடைபட்ட தூரத்தில் மூன்று காற்ற முத்த வால்வுகள் உள்ளன. இதிலொன்று பழுதடைந்துள்ளது. எஞ்சிய இரு வால்வுகள் உள்ள இடத்தில், அவ்வால்வுகள் வழியே பீறிட்டு வரும் தண்ணீர் படும் தரை, அதன் அருகில் உள்ள தழை, செடி, கொடிகளில் வெள்ளை நிறத்தில் மாவு படிந்திருந்தது. இதே போன்ற வெள்ளை நிறப் படிவு, தாழ்த்தப்பட்ட மக்கள் பிடித்து வைத்திருந்த நீரிலும் மிதந்தது. இதற்கு முன் இப்படிப்பட்ட படிவுகள் உருவானதில்லை எனப் பகுதி மக்கள் கூறினர். இந்த சம்பவம் நடந்து முடிந்த பின், இரண்டு, மூன்று நாட்கள் கழித்துப் பிடித்த நீரிலும், இதே போன்ற படிவு ஏற்படவில்லை. கண்ணுக்குப் புலப்பட்ட இந்த ஆதாரத்தை வைத்து, மக்கள் குற்றஞ்சுமத்துவது போல, குடிநீரில் ஏதாவதொரு இரசாயன நஞ்சைச் சமூக விரோதிகள் கலந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வி.வி.மு.வும், ம.உ.பா. மையமும் வந்தன.

இவ்வமைப்பினர், தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் திரட்டிக் கொண்டு, கோட்டாட்சியர் திரு. ஜான் லூயிசைச் சந்தித்து, குடிநீரில் நஞ்சுப் பொருள் கலந்திருக்கக் கூடும் என்பதற்கான ஆதாரங்களைக் காட்டி, இது பற்றி விசாரணை நடத்தி, சம்மந்தப்பட்ட சமூக விரோதிகளைக் கைது செய்ய வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர். ஆனால், அவரோ தாழ்த்தப்பட்டோர் வைத்த கோரிக்கைகளை அதிகாரத் திமிரோடு அலட்சியப்படுத்தியதோடு, இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்வதற்குக் கூட மறுத்துவிட்டார். இந்த நிலையில், தங்களுக்கு நீதி கிடைக்காத பொழுது, தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் வந்தனர்.

குடிநீரில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பதை முறையிட்டபொழுது, அது பற்றி

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**தாழ்த்தப்பட்ட மக்களில் யாராவது ஒருவராவது வாக்களிக்க வரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன் வாக்குச்சாவடிக்கு வெளியே காத்திருக்கும் தேர்தல் அலுவலர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 21

இதழ் 8

ஜூன் 2006

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்:
முகிலன்



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## ஈழம்:

# மிரட்டும் வல்லரசுகள் நெருக்கடியில் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பு என்று வரையறுத்து, தடைசெய்யப்படும் அமைப்புகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்துள்ளது. அதோடு, சிறீலங்காவில் அமைதி முயற்சிகளை ஆதரித்து நிதியளிக்கும் அனைத்து நாடுகளின் கூட்டுத் தலைமை - அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் நார்வே ஆகிய நான்கு நாடுகள் அடங்கியது - விடுதலைப் புலிகளுக்கு கடுமையான மற்றும் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்விரு நடவடிக்கைகளும் விடுதலைப் புலிகளுக்கு உண்மையில் முக்கியப் பின்னடைவைக் கொடுத்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இராணுவத் துறையில் மட்டுமல்ல, அரசியல் மற்றும் அரசு தந்திரத் துறைகளிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ''மாமேதை'' என்று புகழ்பாடித் தள்ளும் புலிகளும் அவர்களது துதிபாடிகளும் இதெல்லாம் வழமையானவைதாம்; நேபாளத்திலும் இந்தியாவிலும் உள்ள மாவோயிஸ்டுகளைக் கூட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது என்று வாதிட்டு அலட்சியப்படுத்தக் கூடும்.

ஒரு இயக்கத்தின் - அமைப்பின் இலட்சியம், திட்டத்தை ஏற்று ஆதரிப்பது என்பது வேறு; அந்த இயக்கம் - அமைப்பு எதிர்கொண்டுள்ள புறநிலை யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது என்பது வேறு. ஒரு அமைப்பு புறநிலை யதார்த்தத்தை சரியாக மதிப்பீடு செய்து அதற்கேற்றவாறு இயக்கத்தை முன்னெடுக்கும் போது ஆதரிப்பதும், அதற்குப் பொருத்தமற்றவாறு இயக்கத்தைத் தவறாகக் கொண்டு செல்லும் போது விமர்சிப்பதுதான் சரியான அணுகுமுறை. ஆனால் விடுதலைப் புலிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் புலிகள் எந்தச் சமயத்தில் என்ன செய்தாலும் ஏற்றிப் போற்றுவதும், துதிபாடுவதும் நியாயப்படுத்துவதுமாக உள்ளனர். புலிகளுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும் அப்படித்தான் அவர்கள் பார்க்கிறார்கள்.

நேபாளத்திலும் இந்தியாவிலும் உள்ள மாவோயிஸ்டுகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்து ஏகாதிபத்திய நாடுகள் ஒடுக்க எத்தணிப்பதற்கும், அந்நாடுகளின்பால் இந்த மாவோயிஸ்டுகள் கொண்டுள்ள அணுகுமுறைக்கும், விடுதலைப் புலிகள் அந்நாடுகளை மதிப்பீடு செய்து அணுகுவதற்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உள்ளன. ஏகாதிபத்திய நாடுகளை எதிரிகளாகக் கருதும் மாவோயிஸ்டுகள், அவற்றுடன் எப்போதும் நட்பு ரீதியிலான அணுகுமுறை கொண்டிருப்பதில்லை. அதோடு தமது சொந்த நாட்டிலுள்ள மக்கள் ஆதரவைச் சார்ந்தே இயக்கத்தை கட்டியெழுப்பியுள்ளார்கள். தமது இயக்கத்தை அந்நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் இல்லை.

இதற்கு மாறாக, அமெரிக்கா உட்பட எந்தவொரு ஏகாதிபத்திய நாட்டையும், தெற்கு ஆசிய துணைக் கண்டத்தில் விரிவாக்க-துணைவல்லரசு நோக்கங் கொண்ட இந்தியாவையே கூட விடுதலைப் புலிகள் தமது எதிரியாக வைக்கவில்லை. மேலும், உலக முதலாளிய நாடுகளின் ஆதரவில்லாவிட்டாலும் அவற்றின் அங்கீகாரத்துக்காகக் காத்து நிற்கிறார்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாக, பிற நாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களை நிதி, அரசியல் மற்றும் பிற ஆதரவுக்காக விடுதலைப் புலிகள் சார்ந்து நிற்கின்றனர். தற்போது விதிக்கப்படும் தடை காரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் பங்கேற்கும் 25 நாடுகளில் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடன் இணைந்துள்ள குறிப்பிட்ட நபர்களின் நிதி - வங்கிக் கணக்குகள், பிற சொத்துக்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் முடக்கப்படும்.

ஈழத்துக்கு வெளியே விடுதலைப் புலிகளின் தலைமையகமாக முன்பு இலண்டனை வைத்துக் கொண்டு இயங்கினார்கள். அங்கு அவர்களின் அரசியல் பிரச்சார மற்றும் நிதி நடவடிக்கைகளுக்குத் தடைசெய்து கிட்டு, லாரன்ஸ் திலகர் போன்றவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஈழம் திரும்பும் வழியில் கிட்டு மற்றும் பிற முக்கிய புலிகள் இந்தியக் கடற்படையால் தாக்கிக் கொல்லப்பட்டார்கள். அதன்பிறகு லாரன்ஸ் திலகர் தலைமையில் பிரான்சின் தலைநகர் பாரீசை மையமாக வைத்து விடுதலைப் புலிகள் இதுவரை இயங்கி வந்தனர். பிரான்சு தவிர சுவிஸ், சுவீடன், ஜெர்மன், நெதர்லாண்ட் மற்றும் நார்வேயிலும் பெருமளவில் குடியேறியுள்ள ஈழத் தமிழர்களின் ஆதரவோடு புலிகள் தமது நிதி, அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கான பின்புலமாகக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பாவைத் தொடர்ந்து, புலிகளின் ஆதரவாளர்கள் பெருமளவு குடியேறியுள்ள கனடா மற்றும்

www.padippakam.com

ஆஸ்திரேலியாவும் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. ஏனெனில், இவ்விரு நாடுகளும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவை அடியொற்றியே முடிவுகள் எடுக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நெருக்குதலை-தனிமைப்படுத்தி முடக்கும் நடவடிக்கைகளை ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் தற்போது தீவிரப்படுத்தியிருப்பதற்கு அவை சொல்லும் காரணங்களில் முக்கியமானவை, சிறீலங்கா அரசுடனான 2002 பிப்ரவரி போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இராணுவத் தாக்குதல்களில் புலிகள் ஈடுபடுவதும், அரசியல் கொலைகள் புரிவதை அதிகரித்து வருகின்றனர் என்பதாகும்.

மேற்கு நாடுகளில் செல்வாக்குப் பெற்றிருந்தவரும், சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சருமான லட்சுமண் கதிர்காமரை கடந்த அக்டோபரில் விடுதலைப் புலிகள் அழித்தொழித்தனர். கடந்த மாதம் 5-ந் தேதி சிறீலங்கா இராணுவத் தலைமையகத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதல் காரணமாக தலைமைத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமுற்றார். இராணுவத்தினர் பலரும் மாண்டு போயினர். அடுத்து வந்த புத்தபூர்ணிமா பண்டிகைக்கு முந்தின நாளன்று சிறீலங்கா கடற்படை கப்பல் மீது பெருந் தாக்குதல் நடத்தினர் கடற்புலிகள். விமானந்தாங்கிக் கப்பல்களின் பாதுகாப்புடன், விடுமுறை முடிந்து ஈழம் திரும்பிய சிறீலங்கா இராணுவ வீரர்கள் எழுநூறு பேரை ஏற்றிக் கொண்டு வந்த கப்பலை 12 விடுதலை புலிகளின் கடற்படை படகுகள் சுற்றிவளைத்தன. இந்திய கடற்படையின் தகவல் - தலையீடு உதவியுடன் சிறீலங்காவின் விரைவு விமானத் தாக்குதல் நடத்தி சில புலிகளின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. மீதி படகுகள் சிதைக்கப்பட்டன. பல கடற்புலிகள் பலியாயினர். பல மணி நேரம் நீடித்த இச்சண்டையில் சிறீலங்காவின் 17 சிப்பாய்களோடு இரண்டு விரைவு தாக்குதல் விமானங்கள் தகர்க்கப்பட்டன. போர்நிறுத்தக் கணிப்பு அதிகாரியோடு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடியுடன் சென்ற கப்பல் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் விடுதலைப் புலிகள் அத்துமீறிய தாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

2002 பிப்ரவரி போர்நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பிறகு சில சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு இறுதியில், அதிலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகிக் கொண்டனர். கடும் முயற்சிக்குப் பிறகு நடந்த ஜெனிவா பேச்சு வார்த்தையும் முறிந்து போனது. இப்போது, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இராணுவத் தாக்குதல்கள் நடத்துவதை புலிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்; அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பவேண்டும் என்று உலக ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகள் அவர்களை நிர்ப்பந்திக்கின்றன. போர்நிறுத்த ஒப்பந்தப்படி, ஈழத்தை ஒட்டிய வான் மற்றும் கடற் பகுதியில் தமக்கு நடமாடும் உரிமை உள்ளது என்று புலிகள் வாதிடுவதை ஏகாதிபத்திய நாடுகள் ஏற்க மறுக்கின்றன. விடுதலைப் புலிகள் ''அரசு அல்லாத ஒரு உறுப்பு'' என்பதால் அத்தகைய உரிமை கோர முடியாது என்று வாதிடுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த நெருக்குதல்கள் தமக்குக் கிடைத்த வெற்றி என்பதாக சிறீலங்காவின் சிங்கள இனவெறி அரசும் அதன் ஆதரவாளர்களும் (இந்தியாவிலுள்ள சோ, இந்துராம், மற்றும் ஈழ துரோகக் கும்பல்கள்) குதியாட்டம் போடுகிறார்கள். ஆனால் சிறீலங்கா அரசும் இராணுவமும் கூட தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தங்களை மீறுவதாகவும், குறிப்பாக வடகிழக்கில் கருணா கும்பலின் கூலிப் படையை வைத்துக் கொண்டு ஈழத் தமிழர்களை கொன்று வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அமைதிப் பேச்சு வார்த்தையில் பாரிய அக்கறை செலுத்தி, இலங்கையில் உள்ள தமிழ் மற்றும் இசுலாமிய சிறுபான்மையினருக்கு அதிகாரப் பகிர்வு செய்து தரவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியமும், இலங்கைக்கு நிதி ஆதரவளிக்கும் நாடுகளின் நான்கு நாட்டு தலைமைக் குழுவும் சிறீலங்கா அரசை எச்சரித்திருக்கின்றன. இருப்பினும், தொடர்ந்து வெறும் எச்சரிக்கை தவிர வேறு பிற நடவடிக்கை - நெருக்குதல் எதுவும் இல்லாத நிலையில், ஈழத்தமிழருக்கு எதிராக சிறீலங்கா அரசு சிங்கள பாசிச இனவெறி தாக்குதலை தொடர்வது தான் நீடிக்கிறது.



தீராத அவலம்: இலங்கையில் இருந்து தனுஷ்கோடி அருகேயுள்ள அரிச்சல்முனைக்கு அகதிகளாக வந்த ஈழத்தமிழர்களிடம் விசாரணை நடத்தும் ''க்யூ'' பிரிவு போலீசு.

ஏற்கெனவே, ஏகாதிபத்திய நாடுகளின் நெருக்குதல்கள் மற்றும் அவற்றின் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற மறுகாலனியாதிக்கத்திற்கு அடிபணிந்துதான் சிறீலங்கா அரசுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் அமைதிப் பேச்சு வார்த்தைக்கு புலிகள் அமைப்பு இணங்கியது. உள்நாட்டில் பரந்துபட்ட மக்களைச் சார்ந்த ஜனநாயக ரீதியிலான விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்பத் தவறிய பாசிச இராணுவவாத கண்ணோட்டம் - நடைமுறைதான் இதற்குக் காரணம். இப்போது ஏகாதிபத்திய நாடுகளின் நெருக்குதல்களுக்கு மேலும் அடிபணிவதா, தொடர்ந்து ஆயுதபலத்தை நம்பி இராணுவ சாகச - சுய அழிவுப் பாதையைத் தெரிவு செய்வதா என்ற கேள்வி விடுதலைப் புலிகள் முன்பு பூதாகரமாக எழுந்து நிற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## "வங்கிக் கடனைக் கட்டாத முதலாளிகள் சூழ்நிலைக் கைதிகள்!"

# – உச்சநீதி மன்றத்தின் அழுகுனித் தீர்ப்பு

தமிழக முதல்வராக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி பதவியேற்றவுடனேயே, தமிழக விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருந்த 6,866 கோடி ரூபாய் பெறுமான கடன்களை ரத்து செய்வதாக அறிவித்தார். இக்கடன் தள்ளுபடியைத் தனது தேர்தல் வாக்குறுதியாக தி.மு.க. குறிப்பிட்டவுடனேயே, பல பொருளாதார வல்லுநர்களுக்குத் துக்கம் தொண்டையை அடைக்க ஆரம்பித்து விட்டது. ''இக்கடன் தள்ளுபடியால் தமிழக அரசுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை எப்படி ஈடுகட்ட முடியும்? இது போன்ற கவர்ச்சித் திட்டங்களால் தமிழகம் முன்னேற முடியாது?'' என்றெல்லாம் புலம்பி, அவர்கள் தங்களின் எரிச்சலைக் கொட்டித் தீர்த்தனர்.

அவர்களின் புலம்பல்களை எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை என்றே வைத்துக் கொள்வோம். இது போன்ற சலுகை முதலாளிகளுக்கு அளிக்கப்படும்பொழுது, அவர்கள் அதனையும் எதிர்ப்பதுதானே நியாயமாக இருக்க முடியும்? ஆனால், உச்சநீதி மன்றமோ இதற்கு வேறு விளக்கம் சொல்கிறது.

''வளர்ச்சி கடன் வங்கி'' என்ற நிதி நிறுவனம், தன்னிடம் தொழில் தொடங்க கடன் வாங்கிவிட்டு, அதற்கான வட்டியையோ; அசலையோ திரும்பவும் வசூலிக்க முடியாமல் நிலுவையில் இருக்கும் 120 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வாராக் கடன்களை சமீபத்தில் தள்ளுபடி செய்தது. இத்தள்ளுபடியை எதிர்த்து நடந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், ''இதனை வங்கி நிர்வாகத்தின் தவறான நடவடிக்கை எனப் பார்க்கக் கூடாது'' எனக் குறிப்பிட்டு, வாராக் கடன் தள்ளுபடிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

''கடன் கொடுத்த வங்கி மற்றும் கடன வாங்கியவர்களின் முயற்சிகளுக்கு அப்பாற்பட்டு, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத / வசூலிக்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

''இலாபத்துடன் இயங்கி வரும் வங்கிகள் இது போன்ற வாராக் கடன்களை தள்ளுபடி செய்யலாம். இந்தத் தள்ளுபடி, வங்கியின் ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் செய்யப்படும் கணக்கியல் நடவடிக்கைதானே தவிர, வங்கிக்குத் தான் கொடுத்த கடனைத் திரும்பப் வசூலிக்கும் உரிமை எப்பொழுதும் உண்டு'' என உச்சநீதி மன்றம் வாராக் கடன் தள்ளுபடிக்கு ஆதரவாகப் பல வாதங்களை எடுத்து வைத்துள்ளது.

தொழில் தொடங்குகிறோம் என்ற பெயரில் தனியார் முதலாளிகள், பொதுத்துறை வங்கிகள் / பொதுத்துறை நிதி நிறுவனங்கள் / தனியார் வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன் 31.3.1997-இல் 47,300 கோடியாக இருந்தது; இந்த வாராக் கடன் 31.3.2001-இல் 81,000 கோடி ரூபாயாக வளர்ந்து, இன்று 1 இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டி விட்டது. வங்கிகளில் போடப்பட்டுள்ள பொதுமக்களின் சேமிப்பை தனியார் முதலாளிகள் கமுக்கமாக ஏப்பம் விட்டிருப்பது, வங்கி ஊழியர்களின் போராட்டத்திற்குப் பிறகுதான் வெளியுலகுக்குத் தெரிந்தது.

''வங்கிகளில் கடன் வாங்கி ஏப்பம் விட்டுவிட்ட முதலாளிகளின் பெயர்களைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும்; அவர்களின் மீது கிரிமினல் வழக்கு தொடருவதற்கு ஏற்றவாறும்; கடனுக்கு ஈடாக அவர்களின் பினாமி சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு ஏற்றவாறும் பொதுத்துறை வங்கிகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்'' என்று வங்கி ஊழியர்கள் கோரி வருகிறார்கள். அக்கோரிக்கைகளை இன்றுவரை ஏற்க மறுத்து, தனியார் முதலாளிகளைக் காப்பாற்றி வரும் மைய அரசிற்கு இந்தத் தீர்ப்பு, எல்லா வாராக் கடன்களையும் ஒரேயடியாக ரத்து செய்துவிடும் வாய்ப்பினை வாரி வழங்கியிருக்கிறது.

கடனைக் கட்ட முடியாத விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; அல்லது சிறுநீரகங்களை விற்றாவது கடனைக் கட்ட முயலுகிறார்கள். இப்படி எந்த தொழில் அதிபராவது கடனைக் கட்ட முடியாமல் நொடித்துப் போய் தெருவுக்கு வந்திருக்கிறாரா?

ஜெயா-சசி தோழிகள், பொள்ளாச்சி மகாலிங்கம், சாராய உடையார் குடும்பம் போன்ற வங்கிக் கடனைக் கட்ட மறுக்கும் 'பெரிய' மனிதர்கள், புதிய புதிய தொழில்களைத் தொடங்கி நடத்தி வருவதை நம் கண்முன்னே பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலையில், இவர்கள் வாங்கிய கடனை வங்கிக் கணக்கில் இருந்து தள்ளுபடி செய்யப் பரிந்துரைப்பது மோசடித்தனமாகாதா?



கடனைக் கட்ட முடியாத விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; அல்லது சிறுநீரகங்களை விற்றாவது கடனைக் கட்ட முயலுகிறார்கள். இப்படி எந்த தொழில் அதிபராவது கடனைக் கட்ட முடியாமல் நொடித்துப் போய்த் தெருவுக்கு வந்திருக்கிறாரா?

தனியார்மயத்தை ஆதரிக்கும் பொருளாதார வல்லுநர்கள், ''முதலாளிகளுக்கு சலுகை வழங்கினால், பொருளாதாரம் முன்னேறும்; விவசாயிகளுக்கோ, பிற உழைக்கும் மக்களுக்கோ சலுகையோ, மானியமோ வழங்கினால் பொருளாதாரம் நாசமாகப் போய் விடும்'' என்ற இரட்டை அளவுகோலை கையில் வைத்திருக்கிறார்கள்.

இந்த மோசடித்தனமான அளவுகோலின் காரணமாகத்தான், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்தவர்கள், உச்சநீதி மன்றம் மூலமாக முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகையைப் பற்றி வாய் திறக்க மறுக்கிறார்கள்.

பங்குச் சந்தையில் முதலீடு செய்வது என்ற பெயரில் தொழிலாளர்களின் சேமநல நிதியையும்; வங்கிகளில் உள்ள பொதுமக்களின் சேமிப்பையும் தனியார் முதலாளிகள் சூறையாடுவதற்கு ஏற்றவாறு ஏற்கெனவே ''சீர்திருத்தங்கள்'' செய்து தரப்பட்டுள்ளன. உச்சநீதி மன்றமோ, கடன் என்ற பெயரிலும் பொதுமக்களின் சேமிப்பைக் கொள்ளையடிப்பதற்கு இத்தீர்ப்பின் மூலம் சட்டபூர்வ தகுதியை வழங்கியிருக்கிறது.

• ரஹீம்

www.padippakam.com

# இலவச - கவர்ச்சி அரசியலின் விபரீதம்

அந்நிய ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் மறுகாலனியாதிக்கமே நாட்டின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிப்பது என்றாகி விட்டது. அதன் விளைவாக, நாட்டின் இறையாண்மையும் மக்களின் வாழ்வுரிமைகளும் சூறையாடப்பட்டு வரும் சூழலில் நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகமும் தேர்தல்களும், தனிநபர்வாதமாகவும் கலாச்சாரச் சீரழிவாகவும் மாறி வருவதற்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது, தமிழக அரசியல்.

உலகவங்கி, ஐ.எம்.எஃப், உலக வர்த்தகக் கழகம் மட்டுமல்ல; மேல்நிலை வல்லரசுகளின் அரசு - இராணுவ அதிகாரிகளே இந்த அரசு நிர்வாகத்தில் தலையீடு செய்து ஆட்டுவிப்பது என்றான பிறகு, நாடாளுமன்ற - சட்டமன்ற ஆட்சியமைப்பும் தேர்தல்களும் முக்கியமாக ஒரே நோக்கத்துக்குத்தான் பயன்படும். ''நாம் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கும் தலைவர்கள்தாம் இன்னமும் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார்கள். நம்ம ஆட்சிதான் நடக்கிறது'' என்ற தோற்றத்துக்குத்தான் பயன்படும். இந்த மாயத்தோற்றத்தைப் பராமரிக்கும் வகையிலான ஓட்டுக் கட்சி அரசியல் மட்டுமே நடத்தப்படுகிறது. அரசியல் கட்சிகள் என்னதான் சாணக்கியத்தனம் மிக்கதாக இருந்தபோதும், இந்த வரம்புகளுக்குட்பட்டு தான் செயல்பட வேண்டும் என்று வால் நறுக்கப்பட்ட பிராணிகளாக வளைய வருகின்றன.

இதனால்தான் காந்தியிசம், கம்யூனிசம், அண்ணாயிசம், இந்துயிசம், அம்பேத்கரிசம், பெரியாரிசம் போன்ற கொள்கை, கோட்பாடு, சித்தாந்தம் ஆகியவற்றின் இடத்தைக் கவர்ச்சித் திட்டங்களும் கவர்ச்சி நடிகர்-நடிகைகளும் பிடித்துக் கொண்டார்கள். தனிநபர்வாதம், கவர்ச்சிவாதம், பிழைப்புவாதம், சாதிய வாதம், பொறுக்கி அரசியல் என்று எல்லா வகையிலும் முன்னோடியாக விளங்குகிறது, ஜெயலலிதா கும்பல். கருணாநிதியின் குடும்ப-வாரிசு அரசியலை எதிர்த்த போராட்டம் என்பதே கூட, தொட்டுக் கொள்ளும் ஊறுகாயாகவே பயன்படுத்தப்படுகிறது.

ஜெயலலிதா கும்பலின் ''எதேச்சதிகார ஆட்சி எதிர்ப்பு'' என்ற முழக்கம் வைத்திருந்தாலும் ஜெயலலிதாவின் அரசியலையே தானும் பின்தொடர்ந்து செல்லுகிறார், கருணாநிதி. இனம், மொழி, சமூகநீதி எல்லாவற்றுக்குமான முழக்கங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு, ''சர்வாதிகார எதிர்ப்பு - ஜனநாயக மீட்பு'' என்று விலையும் மதிப்பும் கூடுதலான பொருளை விற்பதற்கே கூட, தள்ளுபடி விற்பனை - இலவச இணைப்புகளை சேர்த்துக் கொண்டு வந்தபோதுதான் கருணாநிதியின் உடன்பிறப்புகளே கூட எழுச்சியுற்றார்கள்.

தேர்தல் களத்தில் ஜெயலலிதாவும் கருணாநிதியும் எந்த இலட்சியத்தோடு எப்படிச் செயல்பட்டார்கள் என்பதை இரத்தினச் சுருக்கமாக இரண்டே பத்திகளில் பின்வருமாறு புதிய ஜனநாயகம் மே மாத இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

*''தோற்பது நானாக இருந்தாலும் வெல்வது பொறுக்கி அரசியலாக இருக்க வேண்டும். வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது சீரழிவாக இருக்க வேண்டும்'' என்ற கொள்கையுடன் ஓட்டுப் பொறுக்கி அரசியலை அடியாழம் காணமுடியாத அதல பாதாளத்தை நோக்கி இழுத்துச் சென்று கொண்டிருக்கிறார், புரட்சித்தலைவி.*

*முதல்வர் நாற்காலியிலமர்ந்து மக்கள் தொண்டாற்றிய நிலையிலேதான் தனது உயிர் பிரிய வேண்டும் என்ற 'கொள்கை வெறி'யுடன் களத்திலிறங்கியிருக்கும் கருணாநிதி, எந்தப் பாதாளத்திலும் பாய்ந்து பதவி நாற்காலியில் அமர்ந்துவிடத் துடிக்கிறார்.*

இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் ஜெயலலிதா கும்பலைத் தனிமைப்படுத்தி, அனைத்துக் கட்சிக் கூட்டணி அமைப்பதிலும் தமிழகம் - புதுவை இரண்டிலுமாக 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெறுவதிலும் சாதனை படைத்தார், கருணாநிதி. ஆனால் தமிழக சட்டபேரவைக்கான இந்தத் தேர்தலில் கடுமையாக முயற்சித்தும் கூட தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. உளவுத்துறையும், களவுத்துறையும், துதிபாடிகளும் வழங்கிய ''ஆலோசனை''களைக் கேட்டு மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடுவோம் என்ற போதையில்

**தேர்தல் பிரச்சாரம் என்ற பெயரில் தமிழகத் தெருக்களில் நடத்தப்பட்ட ஆபாச ரிக்கார்டு டான்ஸ்: ''அம்மா'' வளர்த்துவிடும் அரசியல் சீரழிவு.**




படிப்பகம்

www.padippakam.com

ஜெயா கும்பல் மிதந்து கொண்டிருந்த அதேசமயம், கள நிலைமையைச் சரியாகக் கணித்த கருணாநிதி, கூட்டணிக் கட்சிகளின் தயவோடாவது ஆட்சி அமைத்துவிட வேண்டும் என்ற உறுதியோடு செயல்பட்டு, அதில் வெற்றியும் பெற்றார்.

எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிடவேண்டும் என்ற நோக்கத்தில் வெற்றிக் கனியைக் கைப்பற்றியபோதும் .கீழே விழுந்து கால் முறிந்து போனது போலாகிவிட்டது. குழுச்சண்டையும் பதவி வெறியும் நிறைந்த காங்கிரசு மற்றும் காலை வாரி விடுவதிலும் அணிமாறுவதிலும் பெயரெடுத்துள்ள பா.ம.க. இராமதாசையும் நம்பி, சிறுபான்மை ஆட்சி அமைத்திருக்கிறார், கருணாநிதி.



வெற்றிக் களிப்பில் மிதக்கும் மு. கருணாநிதி.

ஜெயலலிதா, வைகோ, சோ போன்ற தனது அரசியல் எதிரிகள் குற்றஞ்சாட்டுவதுபோல தனது குடும்ப அரசியல் ஆதிக்கம் ஒன்றையே குறியாக வைத்துச் செயல்படும் ''சுயநல மிக்க - தீயசக்தி'' தான் கருணாநிதி என்ற முத்திரையைப் பொய்ப்பித்து, தனது அரசியல் வாரிசான ஸ்டாலினை அரியணையேற்றுவதற்குச் சாதகமான சூழலை உருவாக்கும் பணியில் இறங்கியுள்ளார். குடும்ப-சுயநல அரசியலுக்கு அப்பாற்பட்ட பழுத்த அனுபவமும் நிர்வாகத் திறமையும் மிக்க ஜனநாயக அரசுத் தலைவர் என்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார், கருணாநிதி.

இதனால்தான், இதுவரை மக்கள் கண்டிராதவாறு போலி வாக்குறுதிகளை வீசி, ஓட்டுப் பொறுக்கிக் கொண்டு போய் பதவியேற்றதும், ஏய்த்துவிடும் அரசியல் தலைவர்கள் போன்றவர் தானல்ல என்று காட்டும்விதமாக பதவியேற்ற நாளன்றே, 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கூட்டுறவுக் கடன்கள் ரத்து, பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவில் வாரம் இரண்டு முட்டை ஆகிய உத்தரவுகளில் கையொப்பமிட்டார்.

அடுத்து அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் தீர்மானத்தை அமைச்சரவை நிறைவேற்றியது. வேலை நிறுத்தத் தடைச் சட்டம் (டெஸ்மா), மதமாற்றத் தடைச்சட்டம் ஆகியவற்றை நீக்குவது, சாதனை மாணவர்களுக்கு கல்வியைத் தொடர உதவி, ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவி, உழவர் சந்தைகள் திறப்பு, கல்லூரிக் கட்டணங்கள் குறைப்பு என்று ஏராளமான சலுகைகள் அறிவிக்கப்பட்டன. தமிழ் மொழி கற்பதைக் கட்டாயமாக்குவது, கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவுவது, சிவாஜிக்குச்சிலை வைப்பது, இலவச கலர் டி.வி, ஏழை விவசாயிக்கு 2 ஏக்கர் நிலம், இலவச காஸ் அடுப்பு எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்வதாக, தேதி குறிப்பிட்டு ஆளுநர் அறிக்கை வாசிக்கச் செய்தார், கருணாநிதி. மொத்தத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் நல்லதே செய்யும் பண்பான அரசு தலைவர் என்று பெயரெடுப்பதற்கு எத்தணிக்கிறார். இப்படிப்பட்டவரின் வாரிசு அரியணையேற்றப்படுவதில் தவறொன்றும் இல்லை என்ற எண்ணத்தை விதைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார், கருணாநிதி.

**கண்டன அறிக்கைகள் விடுவது, ஆளுநரிடமும் நீதிமன்றங்களிலும் மனுப் போடுவது என்ற மு.க.வின் கோழைத்தனமும், வைகோ, திருமா., ராமதாசு மட்டுமல்ல; போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அரசியல் பிழைப்புவாத, சந்தர்ப்பவாத சக்திகள் மாறி மாறி விலை போய் விடுவதும் ஜெயாவுக்கு முக்கிய பலமாக இருக்கிறது.**

ஆனால், ''மக்கள் தீர்ப்பை மதிக்கிறேன்'' என்று தேர்தல் முடிவு குறித்து அறிவித்த ஜெயலலிதா, தோல்வியை ஜீரணிக்க முடியாமல் முடிவு தெரிவதற்கு முன்பிருந்தே படுத்துப் புரளத் தொடங்கிவிட்டார். இறுதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பலமணி நேரம் சென்ற பிறகும் கூட, பெரும்பான்மையான இடங்களில் ஜெயலலிதா கட்சிதான் வாக்கு எண்ணிக்கையில் முன்னணியில் இருப்பதாக,ஜெயா டி.வி. ரபி பெர்னார்ட் செய்தி சொல்லிக் கொண்டிருந்தார். ஜெயலலிதாவைச் சுற்றி நெருக்கமாக உள்ள துதிபாடிகளே கூட தோல்வியடைந்துவிட்ட உண்மையைச் சொல்ல முடியாது பயந்து புளுகி வந்தனர் என்றால் பாருங்கள்!

வாக்குப் பதிவுக்கு முந்தின நாளிலிருந்து தி.மு.க.வின் ''சன்'' தொலைக்காட்சி ''ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!'' என்ற தலைப்பில் கருணாநிதி கைது, ஜெயலலிதா ஆட்சியில் மாணவர்கள்-போக்குவரத்துத் தொழிலாளர்கள்-அரசு ஊழியர்கள் மீதான போலீசு தாக்குதல்கள், தர்மபுரியில் மாணவிகளை எரித்துக் கொன்றது மற்றும் எலிக்கறி-கஞ்சித் தொட்டி ஆகிய காட்சிகளை தொகுத்து ஒளிபரப்பியது.

அதேபோல தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா கைது, நீலகிரி தேயிலைத் தோட்டத்து இளைஞர்கள் நிர்வாணமாக்கித் தாக்கப்பட்டது, தாமிரவருணிப் படுகொலைகள் போன்ற சம்பவங்களை ஜெயா டி.வி.யும் தொகுத்துக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அதை விடுத்து, செய்தித் தொகுப்பு என்ற பெயரில் ''கலைஞர் கைமாறு'' என்ற ஒன்றை வாக்குப்பதிவுக்கு முன்பிருந்து ஆட்சி மாற்றத்துக்குப் பின்பும் பல நாட்கள் திரும்பத் திரும்ப ஜெயா டி.வி. ஒளிபரப்பியது. ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற நளினியின் தங்கை கணவருக்கும் மாமனாருக்கும் ''கைமாறு'' செய்யும் வகையில் கருணாநிதி, ''கண்ணம்மா'' திரைப்படம் எடுத்து கொடுத்ததாகச் சொல்லுகிறது அந்த செய்தித் தொகுப்பு. ராஜீவ் கொலை வழக்கில் நளினி தண்டனை பெற்றார் என்பதற்காக அவரது குடும்பத்தையே கொலைகாரக் குடும்பமாகச் சித்தரிப்பதும், அக்குடும்பத்துடன் எந்த வித உறவும்-தொடர்பும் வைப்பதே உள்நோக்கம் கொண்டதாகச் சித்தரிப்பதும் ஜெயலலிதாவின் பாசிச-வக்கிரத்தையே காட்டுகிறது. சென்னை


படிப்பகம்

www.padippakam.com



நிரந்தர முதல்வர் ஆசை பறிபோனதால், முகம் வாடிப்போன ஜெயா.

தி.நகரில் உள்ள தியாகராயர் மாநக ராட்சி அரங்கில் நளினியின் சகோதரர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்ததற் காகவே தான் ஆட்சிக்கு வந்ததும் அந்த அரங்கை மூடிவிடும்படி உத்திரவு போட்டவர்தான் இந்த ஜெயலலிதா. விடுதலைப் புலிகளின் உறுதியான ஆத ரவாளர்களாகக் காட்டிக் கொள்ளும் வைகோவும், திருமாவும் இதற்கெல் லாம் என்ன சொல்லப் போகிறார்களோ!

டெல்லியிலும், பாண்டியிலும் கூட் டணி ஆட்சி நடத்தும் கட்சிகளின் ஆதர வோடுதான் இங்கே கருணாநிதி அரசு அமைந்துள்ளது. ஆனாலும் தி.மு.க.வின் சிறுபான்மை அரசு இன் னும் ஓராண்டு கூட நீடிக்காது என்றும் நடந்து முடிந்த தேர்தலில் தன் கட்சி தோற்கவே இல்லை; தி.மு.க.தான் சரி வைச் சந்தித்துள்ளது என்றும் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகி றார், ஜெயலலிதா. தன் கட்சிக் கூட்டத்தி லேயே தானிருக்கும் மேடையில் வேறொருவர் அமர்வதைக் கூட சகிக்க முடியாத ஜெயலலிதா, தானே தனது பரம்பரை எதிரியென அறிவித்த ஒரு வர் தனது எதிரிலேயே முதலமைச்சராக அமர்ந்திருப்பதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

மேலும், தனது ''பரம்பரை எதிரி'' ஆட்சியில் நீடித்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எந்த நேரத்தில் எந்தக் குற்றச் சாட்டின் கீழ் சிறையிலடைக்கப்படு வோமோ என்ற பீதியில் வேறு தவித்துக் கொண்டிருக்கிறார், ஜெயலலிதா. எனவே, இந்த ஆட்சியைக் கலைப் பதற்கு பஞ்சமாபாதகங்களை மட்டு மல்ல, அதற்கு மேலும் போகவும் தயா ராக உள்ளார். அதற்கான ''திறமை''யும் அவரிடம் நிறையவே உள்ளது. எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போதே, அவர் செயலிழந்து போய்விட் டார், அவரது ஆட்சியைக் கலைத்து விட்டு தன்னை முதலமைச்சராக்கும் படி ஆளுநரிடம் மனுக் கொடுத் தவர்தான் ஜெயா். ஜானகி எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது, தமிழக சட் டமன்றத்தையே தனது விசுவாசிகளை வைத்து ரணகளமாக்கி அராஜக வெறியாட்டம் போட்டு ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்திக் காட்டினார். அப்போதைய ஆளும் அ.தி.மு.க. கட்சியில் தனது அணி சிறுபான்மை யாக இருந்தும் கூட ஆர்.வெங்கட்ராமன், ராஜீவ் காந்தி போன்றவர் களிடம் தனக்கிருந்த செல்வாக்கை வைத்தே இதைச் சாதித்தார்.

அடுத்து அமைந்த கருணாநிதியின் பெரும்பான்மை ஆட்சியை அடாவடி யாகக் கலைக்கும்படி செய்தார். சந்திர சேகர், ராஜீவ் காந்தியிடம் தனக்கிருந்த தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் வெங் கட்ராமன், டி.என். சேஷன் , சுப்ரம ணிய சுவாமி போன்ற பார்ப்பன கும்ப லின் ஆதரவுடன் இதைச் சாதித்தார். 1996 தேர்தலுக்குப் பிறகு அமைந்த கருணாநிதி ஆட்சியைக் கலைக்கும்படி யும் தன் மீதான கிரிமினல் வழக்கு களை இரத்து செய்து விடும்படியும், பா.ஜ.க.வுடன் மத்தியில் கூட்டணி அர சில் பங்கேற்றபோது நிர்பந்தித்தார். அதுமுடியாதபோது மத்தியக் கூட்டணி ஆட்சியையே சு.சாமி துணையோடு கவிழ்த்தார். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, தானும் பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தார், கருணாநிதி.

தனது சொந்த ஆதாயத்துக்காக யாருடனும் கூட்டுச் சேருவதில் நாட்டி லேயே முன்னோடியாக விளங்குபவர் தான் ஜெயலலிதா. ஒருபுறம் பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா, அத்வானி, நரேந்திர மோடி ஆகிய பார்ப்பன கும்பலோடும் மறுபுறம் தேவகவுடா, முலயம், லல்லு ஆகிய பிழைப்புவாத - சமூக நீதிக் கும்பலுட னும் உறவு வைத்துக் கொண்டிருக்கி றார். அதேபோல, தனது சொந்த ஆதா யத்துக்காக பச்சையாகப் புளுகக் கூடிய வர்தான் ஜெயலலிதா. எம்.ஜி.ஆரை நஞ்சு வைத்து ஜானகி கொன்றுவிட் டார், கோவில் பிரசாதத்தில் நஞ்சு வைத் தும், தனது கார் மீது லாரி ஏற்றியும் கரு ணாநிதி கொல்ல முயன்றார், ஆளுநர் சென்னாரெட்டி தன்னிடம் தகாத முறை யில் நடக்க முயன்றார், தனது ஆட்சி யில் நடக்கும் கொள்ளைகளெல்லாம் தி.மு.க.வினரே திட்டமிட்டுச் செய் பவை, போலீசு நிலையக் கற்பழிப்புப் புகார்களெல்லாம் நட்ட ஈடுபெறுவதற் காக சில பெண்கள் கூறும் பொய்கள், எம்.ஜி.ஆர். நகரில் நடந்த வெள்ள நிவாரண நெரிசல் சாவுகள் தி.மு.க. வதந்தியால் ஏற்பட்டவை, 'டான்சி'

## ஜெயா எழுதும் "கட்டை மொய்"!

**அ.தி.மு.க.வின் நிரந்தரத் தலை வியும், தமிழகத்தின் நிரந்தர முதல்வ ராக அக்கட்சி கருதும் அம்மா(!) ஆட்சி அதிகாரத்தை இழந்த 15 நாட்க ளில் 75-க்கும் மேலான அக்கட்சித் தொண்டர்கள் தற்கொலை செய்து கொண்டோ, மாரடைப்பாலோ மரண மடைந்துள்ளார்கள்.**

**"இப்படிச் செய்யவேண்டாம்; இத னால் தனது மனம் மிகுந்த வேதனைய டைகிறது. நடந்து முடிந்த தேர்தல்க ளில் தனது கட்சி தோல்வியடைய வில்லை; இதுவரை இல்லாத சாதனை அளவு ஓட்டுக்களை வாங்கியிருக்கி றது; தீய சக்தி கருணாநிதியின் கட்சி தான் வாக்குவிகிதத்தில் சரிவைக் கண்டுள்ளது. எனவே நாம் மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம் நாளை நமதே" என்று ஒவ்வொரு சாவுக்கும் இரங்கல் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார், ஜெயலலிதா. ஆனால், "தியாகி"களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.**

**"புரட்சித் தலைவி அம்மா"வின் ஆட்சியின் மீதும் கட்சியின் மீதும் அக்கட்சித் தொண்டர்கள் இவ்வளவு பற்று வைத்திருக்கிறார்களா என்று எண்ணிவிட வேண்டாம். ஒவ்வொரு சாவுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் என்று தவறாது ஜெயலலிதா "கட்டை மொய்" (திருமணத்துக்கு மொய் எழு துவதைப் போல சாவுக்கு எழுதப்படும் மொய்) எழுதுவதுதான் இந்த அதிர்ச் சித் தியாகங்களுக்கும் காரணம். இவர் களெல்லாம் மனநோயாளிகள் என் பதா அல்லது நல்ல தொகைக்குக் காப் பீடு செய்துவிட்டு, சாவுச் சான்றிதழ் கள் தயாரித்து மோசடி செய்யும் கிரிமி னல்களா என்பது தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. மைத்ரேயன்களும் மலைச்சாமிகளும் மட்டும் இந்தத் தியாகிகள் பட்டியலில் சேராது தளபதி களாகவே உள்ளனர். பார்ப்பனர்கள், பண்ணையார்கள் வீட்டுப் பெண்க ளுக்கு மட்டும் சாமியும் வருவ தில்லை; பேயும் பிடிப்பதில்லை!**



படிப்பகம்

www.padippakam.com

நிலத்தை வாங்கிய பத்திரத்தில் உள்ளது தனது கையெழுத்தே கிடையாது என்று அடுக்கடுக்காகப் புளுகினார். பயங்கர வாத, பிளவுவாத பீதியூட்டி, போலீசு - பார்ப்பன அதிகாரிகளை வைத்து அரசியல்-நிர்வாகம் நடத்தி ஆதாயம் தேடுவதையே தனது ஒரே கொள்கையாகக் கொண்டிருப்பவர், ஜெயலலிதா.

மேற்படி அணுகுமுறைகளைக் கொண்டு அடாவடி, அராஜக, தாக்குதல் அரசியல் நடத்தாவிட்டால், கிரிமினல் குற்றவழக்குகளில் இருந்து தான் தப்பிக்க முடியாது என்று தொடர்ந்து திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார், ஜெயலலிதா. 1989-இல் தமிழக சட்டமன்றத்துக்குள், கருணாநிதி ஒரு கிரிமினல் என்று ஏசி, பட்ஜெட் உரையைக் கிழித்து அவர்மீது விசிறியடித்து விட்டு, தானே தனது ஆடையைக் கிழித்துக் கொண்டு, மயிரைப் பிய்த்துப் போட்டுக் கொண்டு அனுதாப அரசியல் நாடகமாடினார். ராஜீவ் கொலைக்குக் காரணம் கருணாநிதிதான் என்று அவதூறு பரப்பி, அனுதாப அரசியல் நடத்தி ஆதாயம் தேடினார். அதே நாடகங்களை மீண்டும் அரங்கேற்றி மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு இப்போதும் ஜெயலலிதா எத்தணிக்கிறார். ஜெயலலிதா கட்சியின் சமீபத்திய சட்டமன்ற அராஜகமும், ''கலைஞரின் கைமாறு'' என்ற ஜெயா டி.வி.யின் ஒளிபரப்பும் இதை உறுதி செய்கின்றன.

ஜெயலலிதாவின் இந்த பார்ப்பன - பாசிச - வக்கிரமும் பயங்கரவாதமும் வெற்றி பெறுவதற்கு அவரது துதிபாடிகள் கூறுவதைப் போன்று அவரது துணிச்சல் - தைரியம் - அறிவுத்திறமை - தெளிவு காரணமல்ல. நிலவிவரும் நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகத்தின் தன்மையே இதுதான். ஜெயலலிதாவின் மக்கள் விரோத - ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடுவதற்குப் பதில் கண்டன அறிக்கைகள் விடுவது, ஆளுநரிடமும் நீதிமன்றங்களிலும் மனுப் போடுவது என்ற கருணாநிதியின் கோழைத்தனமும், வைகோ, திருமா, ராமதாசு மட்டுமல்ல; போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அரசியல் பிழைப்புவாத, சந்தர்ப்பவாத சக்திகள் மாறி மாறி விலை போய் விடுவதும் அவருக்கு முக்கிய பலமாக இருக்கிறது. ஆகவேதான், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலை போலவே, ஜெயலலிதாவும் விரைவில் தற்போதைய ஆட்சி கவிழும், அடுத்த சுற்றில் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் இருக்கின்றார்.

● ஆர்.கே.

## கோதுமை இறக்குமதி:

# மறுகாலனியாதிக்கத்திற்கு உணவும் ஒரு ஆயுதம்

வடநாட்டில் இப்போது கோதுமை அறுவடைக் காலம். விவசாயிகள் அறுவடைத் திருவிழாக்களைக் கொண்டாடும் நேரம். அத்திருவிழாக்களைத் தொடர்ந்து, பல விவசாயக் குடும்பங்களில் இளைஞர்களுக்குத் திருமண ஏற்பாடுகள் நடக்கும் காலம். ஆனால், ஆயிரமாயிரம் கனவுகளோடு அறுவடையை முடித்த விவசாயிகளின் நெஞ்சில் இடியென இறங்கியுள்ளது விலை வீழ்ச்சியும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கோதுமையும்.

அறுவடை தொடங்கிய போது, கிலோ 8-9 ரூபாய்க்கு விலைபோன கோதுமை, இன்று கிலோ 5 ரூபாய்க்கும் கீழாக வீழ்ச்சியடைந்து விட்டதால், விவசாயிகள் வேதனையில் துடிக்கிறார்கள். அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலையான ரூ. 6.50 பைசாவுக்குக் கூட அரசு கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் கோதுமையை வாங்க மறுக்கிறார்கள். ''கோதுமையில் ஈரப்பதம் அதிகமாக உள்ளது; உமி அதிகமாக உள்ளது; தரம் குறைந்துள்ளது'' என்றெல்லாம் ஆயிரத்தெட்டு காரணங்களைச் சொல்லிக் கொள்முதல் செய்ய மறுப்பதால், விவசாயிகள் வேறு வழியின்றி அடிமாட்டு விலைக்குக் கோதுமையை வியாபாரிகளிடம் விற்கிறார்கள்.

அரசாங்கமோ கோதுமையைக் கொள்முதல் செய்யாமல் தட்டிக் கழிக்கிறது. இதனால் அரசாங்கக் கிடங்குகளில் கோதுமை கையிருப்பு குறைகிறது. கையிருப்பில் கோதுமை குறைவாக உள்ளதைக் காரணம் காட்டி, பொது விநியோகத்துக்கு (ரேஷன் கடைகளுக்கு) இன்னும் கோதுமை தேவை என்று வாதிடும் அரசாங்கம், வேறு வழியின்றி வெளிநாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்வதாகக் கூறுகிறது. ஆனால், தற்போதைய பருவத்தில் கோதுமை விளைச்சல் கடந்த ஆண்டைவிட ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக இருக்கும் என்றும் ஏறத்தாழ 125 லட்சம் டன் அளவுக்கு கோதுமை கிடைக்கும் என்றும் அரசின் புள்ளியியல் துறை கணக்கு கொடுக்கிறது. பொது விநியோகத்துக்கு ஏறத்தாழ 88 லட்சம் டன் கோதுமை தான் தேவை. அதைத் தாராளமாக விவசாயிகளிடமிருந்தே அரசாங்கம் கொள்முதல் செய்திருக்க முடியும். விவசாயிகளுக்கும் கோதுமைக்கு உரிய விலை கிடைத்திருக்கும். ஆனால், மைய அரசும் மாநில அரசுகளும் விவசாயிகளிடமிருந்து கோதுமையைக் கொள்முதல் செய்ய மறுக்கின்றன. மறுபுறம், மலை

**சென்னை துறைமுகத்தில் வந்து இறங்கியுள்ள ஆஸ்திரேலிய கோதுமையின் தரத்தைப் பரிசோதிக்க மாதிரி எடுக்கும் அதிகாரிகள்.**





படிப்பகம்

www.padippakam.com

போல் கோதுமை குவிந்து கிடக்கும் சூழலில், வெளிநாடுகளிலிருந்து 35 லட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்ய மைய அரசு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த மே மாதத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து 5 லட்சம் டன் கோதுமை சென்னை துறைமுகத்திற்கு வந்திறங்கியுள்ளது. அதன் தரத்தைச் சோதித்து பார்த்த அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். இறக்குமதியாகும் உணவு தானியங்களில் அதிகபட்சமாக 0.02 சதவீத அளவுக்குள் நச்சுத்தன்மை இருந்தால் மட்டுமே அதை அனுமதிப்பது வழக்கம். ஆனால், ஆஸ்திரேலிய கோதுமையில் 0.25 சதவீத அளவுக்கு நச்சுத்தன்மை உள்ளது. சென்னை மட்டுமின்றி, மைசூரிலுள்ள பரிசோதனைக் கூடத்திலும் சோதித்தறியப்பட்டு இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பூச்சிக்கொல்லி மருந்தின் எச்ச அளவும் இரசாயன உரங்களின் பின்விளைவால் தோன்றும் நச்சுத்தன்மையின் அளவும் இந்தக் கோதுமையில் அதிகமாக உள்ளது. மேலும், இந்தக் கோதுமையில் ஏறத்தாழ 20% அளவுக்கு ஈரப்பதம் உள்ளது. (ஆனால், கொள்முதல் நிலையங்களில் 12%-க்கு மேல் ஈரப்பதம் இருந்தால் விவசாயிகளிடமிருந்து அதிகாரிகள் வாங்க மறுக்கிறார்கள்). இவை தவிர, இக்கோதுமையில் வளர்ச்சி குன்றிய தானியங்களின் விகிதம் அதிகமாக இருப்பதோடு, பூஞ்சைத்தன்மையின் விகிதம் அதிகமாகவும் காளான் வகைப்பட்ட கூலநோய் தாக்கிய தானியங்களின் விகிதம் அதிகமாகவும் உள்ளது.

ஆனாலும், தரம் குறைந்த நச்சுத்தன்மை மிகுந்த இந்தக் கோதுமையை இந்திய அரசு நிராகரித்துத் திருப்பி அனுப்பவில்லை. அதற்கு மாறாக, இந்திய அரசு தனது தரக்கட்டுப்பாட்டு விதிகளையே தளர்த்தி இந்த நச்சுக் கோதுமையை நல்ல கோதுமைதான் என்று நியாயப்படுத்தக் கிளம்பிவிட்டது. இந்தக் கோதுமை தென்மாநிலங்களில் ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட உள்ளது. இந்த நச்சுக் கோதுமையால் இனம் புரியாத நோய்கள் மனிதனைத் தாக்கும்; குழந்தைகளுக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்று உணவியலாளர்களும் அறிவியலாளர்களும் எச்சரித்த போதிலும், இந்திய ஆட்சியாளர்கள் அவற்றையெல்லாம் துச்சமாக மதித்து, அடுத்த கப்பலுக்கு ஆர்டர் கொடுத்துள்ளனர்.



**உலக வர்த்தகக் கழகத்தின் தலைவர் பாஸ்கல் லாமேயின் வருகையை எதிர்த்து தில்லியில் விவசாய அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

விவசாயிகளிடம் கிலோ ரூ. 6.50-க்குக் கூட கொள்முதல் செய்ய மறுக்கும் அரசு, ஆஸ்திரேலிய நச்சுக் கோதுமையை ஏறத்தாழ கிலோ ரூ. 11.00-க்கு வாங்கியிருக்கிறது. இவ்வளவு அதிக விலை கொடுத்து நச்சுக் கோதுமையை வாங்குவதற்குப் பதிலாக, விவசாயிகளிடமே கோதுமையைக் கொள்முதல் செய்யலாமே என்று கேட்டால், ''போக்குவரத்துச் செலவுகளைக் கணக்கிட்டால் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்முதல் செய்யும் கோதுமையின் விலை இதைவிட அதிகமாகும். எனவேதான், அதைவிட மலிவான விலையில் கோதுமையை இறக்குமதி செய்கிறோம்'' என்கிறார் உணவு அமைச்சர் சரத்பவார். அப்படியானால், உள்நாட்டில் உற்பத்தியாகிக் குவிந்து கிடக்கும் கோதுமையை யார் வாங்குவார்கள்? கடன் வாங்கி பாடுபட்டுப் பயிரிட்ட விவசாயி என்ன செய்வது? என்று கேட்டால் உதட்டை பிதுக்குகிறார் உணவு அமைச்சர்.

இது ஒருபுறமிருக்கட்டும். போக்குவரத்து வசதி நிறைந்துள்ள இன்றைய நிலையில், உலகின் எந்த நாட்டிலிருந்தும் ஏறத்தாழ 15-20 நாட்களில் எவ்வளவு டன் உணவு தானியத்தையும் இந்தியாவுக்குக் கொண்டு வர முடியும். அவ்வாறிருக்க, அறுவடைக் காலத்தில், விளைந்த கோதுமையை விற்க முடியாமல் விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் அவசரம் அவசரமாக வெளிநாட்டிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் என்ன? விவசாயிகளிடம் கொள்முதல் செய்தபிறகு, சேமிப்பில் பற்றாக்குறை ஏற்பட்டால் அதற்கேற்ப கோதுமையை இறக்குமதி செய்வதை விடுத்து, இப்படி அவசர அவசரமாக இறக்குமதி செய்து, விவசாயிகளின் வயிற்றில் ஏன் அடிக்க வேண்டும்?

இவையெல்லாம் மைய அரசின் நிர்வாகக் குளறுபடிகளோ, அல்லது கமிசன் மூலம் கிடைக்கும் ஆதாயத்துக்காக அதிகாரிகளும் அமைச்சர்களும் செய்யும் தில்லுமுல்லு - மோசடிகளோ அல்ல. இவையெல்லாம் உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுகள். பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளின் கட்டளைகள். அவற்றுக்கு விசுவாசமாகச் சேவை செய்வதுதான் எங்கள் வேலை என்கின்றனர் ஆட்சியாளர்கள்.

ஏழை நாடுகளின் உணவுச் சந்தையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செலுத்த ஏகாதிபத்திய நாடுகளின் உணவு வர்த்தகக் கழகங்கள் நீண்ட காலமாக முயற்சித்து வருகின்றன. உணவு தானியங்களை ஏழை நாடுகளில் இறக்குமதி செய்து ஆதிக்கம் செய்வதில் அவை குறியாக இருக்கின்றன. எனவேதான் உணவு உற்பத்தியைக் குறை; மானியங்களை நிறுத்து என்று உத்தரவிடுகிறது உலக வங்கி. 'மலிவான' விலையில் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யுமாறும்; உணவு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பெயரளவிலான சுயசார்பையும் கைவிடுமாறும் பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகள் நிர்பந்திக்கின்றன. இதனடிப்படையில் ரேஷனில் விநியோகிக்கப்படும் உணவு தானியங்களின் விலைகள் படிப்படியாக உயர்த்தப்பட்டன. அரசாங்க கொள்முதல் படிப்படியாகக் கைவிடப்பட்டு, விவசாயிகள் வர்த்தகச் சூதாடிகளிடம் அடிமாட்டு விலைக்கு உணவு தானியங்களை விற்று போண்டியாகிப் போயினர். இப்போது அடுத்த கட்டமாக வெளிநாடுகளிலிருந்து உணவு தானிய இறக்குமதி தொடங்கிவிட்டது.


இனி இந்திய விவசாயிகள் என்ன செய்வது? ''கோதுமையையும் நெல்லையும் விட்டுத் தொலையுங்கள்; தோட்டப் பயிர், மலர்ப் பண்ணை, எண்ணெய் வித்துக்கள் போன்று நல்ல ஏற்றுமதி வாய்ப்புள்ள உற்பத்திக்கு மாறுங்கள். உலகச் சந்தையின் தேவைகளுக்கேற்ப விவசாயத்தை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்'' என்று 2001-ஆம் ஆண்டிலேயே அரியானா விவசாயிகளுக்கு உபதேசித்தார், அன்றைய பா.ஜ.க. பிரதமர் வாஜ்பாய். இப்போது, ஜெட்ரோபா எனும் மூலிகை எரி எண்ணெய்ச் செடியைப் பயிரிடச் சொல்கிறார் மைய அமைச்சர் மணிசங்கர் அய்யர். கோலியாஸ் கிழங்கும் கற்றாழையும் பயிரிட்டு லட்சாதிபதிகளாகிவிட்ட



படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளின் 'பிசினஸ் வெற்றிக் கதை'களைப் பரபரப்பாக வெளியிட்டு, நீங்கள் எப்போது லட்சாதிபதியாகப் போகிறீர்கள் என்று கேட்கிறது, ''நாணயம் விகடன்.''



நமது நாட்டு கோதுமையை விட, அந்நிய நாட்டு கோதுமை எந்தவிதத்திலும் தரமானதில்லை.

ஆனால், இந்திய விவசாயிகளோ குமுறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மே மாதத்தில் உலக வர்த்தகக் கழகத்தின் தலைவரான பாஸ்கல் லாமே இந்தியாவுக்கு வந்தபோது, தமிழக உழவர் உழைப்பாளர் கட்சியும் பாரதிய கிஸான் யூனியனும் சேர்ந்து டெல்லியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கும் உலக வர்த்தகக் கழகத்துக்கு எதிராகவும், இந்தியாவில் கோதுமை உற்பத்தி குவிந்துள்ள நிலையில் இறக்குமதி செய்யும் இந்திய அரசின் துரோகத்துக்கு எதிராகவும் அவர்கள் முழக்கமிட்டனர்.

கோதுமை இறக்குமதி மட்டுமல்ல; உலக வர்த்தகக் கழகத்தின் ஆணைப்படி இனி அடுத்தகட்டமாக நெல், சோளம், எண்ணெய் வித்துக்கள் முதலானவையும் இறக்குமதி செய்யப்படவுள்ளன. ஏற்கெனவே பாமாயில் இறக்குமதியால் கேரளத்தின் தென்னை விவசாயமும் விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பால் பொருட்களின் தாராள இறக்குமதியால் நாடெங்கும் பால் உற்பத்தியாளர்கள் வாழ்விழந்து நிற்கின்றனர். சூரியகாந்தி, சோயா மொச்சை, சர்க்கரை, பருப்பு வகைகள் என நீண்டு கொண்டே போகும் இறக்குமதி, இப்போது நெல், கோதுமை என அடிப்படையான உணவு தானியங்களையே இறக்குமதி செய்வதாக வளர்ந்துவிட்டது.

இந்தியாவின் பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கி, மராமத்துப் பணிகளைப் புறக்கணித்து, மிகப்பெரிய பஞ்சத்தை விளைவித்து இலட்சக்கணக்கான மக்களைக் காவு வாங்கியது அன்றைய காலனியாதிக்கம். இன்று, விவசாயத்தை நாசமாக்கியும் சுயசார்பை ஒழித்து உணவு தானியங்களை இறக்குமதி செய்தும் விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கியும் பேரழிவை விளைவித்து வருகிறது மறுகாலனியாதிக்கம். நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்படுத்தி இன்னுமொரு பஞ்சபூமியாக மாற்றும் துரோகத்தனத்தை வேகவேகமாகச் செய்து வருகிறது காங்கிரசு கூட்டணி அரசு. அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரித்து வரும் போலி கம்யூனிஸ்டுகள் உணவு அமைச்சருக்குக் கடிதம் எழுதி விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

● பாலன்

# தோழர் இராமமூர்த்தி அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!

கடந்த 25 ஆண்டுகளாகப் புரட்சிகர இயக்கத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியில் ஊக்கமுடன் செயல்பட்டு வந்த கோவை - கணபதியைச் சேர்ந்த தோழர் நா.இராமமூர்த்தி, கடந்த 9.5.06 அன்று திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் தனது 47-வது வயதில் மரணமடைந்து விட்டார்.

கோவையில் நடந்த குண்டு வெடிப்புக்குப் பின்னர், அரசு பயங்கரவாதிகள் கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறை - அட்டூழியங்களுக்கு மத்தியில், துணிவாகப் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்வதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்தான் தோழர் இராமமூர்த்தி. தெருமுனைக் கூட்டங்கள் நடத்தியதற்காகவும் சுவரொட்டி பிரச்சாரம் செய்ததற்காகவும் அவர் பல முறை கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்ட போதிலும், இம்மியளவும் சோர்வடையாமல் தொடர்ந்து உற்சாகமாகச் செயல்பட்ட தோழர்தான் இராமமூர்த்தி. கடைசல் தொழிலாளியான அவர், தொழிலாளி வர்க்கத்துக்கே உரித்தான போர்க்குணத்தோடு போலீசு நிலையம், வழக்குமன்றம், சிறைச்சாலை என எங்குமே சமரசத்திற்கு இடம் தராமல் உறுதியாக நின்று போராடினார். புரட்சிகர இயக்கத்தின் எந்த நிகழ்ச்சியானாலும், தான் மட்டுமின்றி, தனது குடும்பத்தாரையும் உடன் அழைத்து வந்து பங்கேற்பது அவரது தனிப்பண்பு.



கோவை-கணபதி நகரம் இதுவரை கண்டிராத வகையில், சாதி-மதச் சடங்குகள் ஏதுமின்றி பாட்டாளி வர்க்க உணர்வோடு நடந்த தோழரது இறுதி ஊர்வலத்திலும், அதன் பின்னர் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்திலும் திரளாக தோழர்களும் பகுதிவாழ் உழைக்கும் மக்களும் பங்கேற்றனர். பு.ஜ.தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன், ம.க.இ.க. பொருளாளர் தோழர் சீனிவாசன் ஆகியோர் தோழர் இராமமூர்த்தியின் உயரிய கம்யூனிசப் பண்புகளை நினைவு கூர்ந்து வீரவணக்கம் செலுத்தினர்.

தோழர் இராமமூர்த்தியின் கடின உழைப்பு, எளிய வாழ்வு, அடக்குமுறைக்கு அஞ்சாத உறுதி, பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்வதில் அவரது ஆர்வம் - ஆகிய உயரிய கம்யூனிசப் பண்புகளை உறுதியாகப் பற்றி நின்று புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

*— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, கோவை.*


படிப்பகம்

www.padippakam.com

## பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு:

# மீண்டும் தலைதூக்கும் பார்ப்பனத் திமிர்! சமூகநீதிக் கட்சிகளின் சமரசம்!

மதம் மற்றும் மொழிச் சிறுபான்மை தகுதி கொண்ட தனியார் கல்லூரிகள் தவிர்த்து, பிற சுயநிதிக் கல்லூரிகள் அனைத்திலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதைச் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தும் அரசியல் சாசன சட்டத்திருத்தமொன்று நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது. தனியார் - சுயநிதிக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்குவதை ரத்து செய்த உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை, இந்த 93-ஆவது சட்டத்திருத்தம் செல்லாக்காசாக்கிவிட்டதாக ஓட்டுக்கட்சிகள் கூறி வருகின்றன. எனினும், இந்தந்த திருத்தத்திற்கு ஏற்ப மாநில அரசுகள் சட்டம் இயற்றாததால், இந்தக் கல்வியாண்டில் தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு அமலுக்கு வருமா என்பது இரண்டுங்கெட்டானாகத்தான் இருக்கிறது.

இந்த விவகாரம் அந்தரத்தில், ஊசலாடும் பொழுதே, "இந்த 93 ஆவது அரசியல் சாசன சட்டத் திருத்தத்தின்படியும், மண்டல் கமிசன் பரிந்துரையின் படியும் இந்திய தொழில் நுட்பக் கழகம், இந்திய மேலாண்மைக் கழகம், இந்திய அறிவியல் கழகம், 20 மையப் பல்கலைக்கழகங்கள், ஆறு மருத்துவக் கல்லூரிகள் அடங்கிய மைய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்ய மைய அரசு முடிவெடுத்திருப்பதாகவும்; இது பற்றிய அறிவிப்பு ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல்கள் முடிந்த பிறகு வெளியிடப் படும்" என்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங், தேர்தல் பிரச்சாரம் சூடாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் அறிவித்தார்.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, வி.பி.சிங் தலைமையில் இருந்த தேசிய முன்னணி அரசு மண்டல் கமிசன் அறிக்கையை ஏற்றுக் கொண்டு, அதன் ஒரு பகுதியை - மைய அரசின் வேலைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு - நடைமுறைப்படுத்த முயன்ற பொழுது, அதனை எதிர்த்து பார்ப்பன - மேல்சாதி மாணவர்களைத் தூண்டிவிட்டு கலவரங்களை நடத்திய காங்கிரசு கட்சி, இப்பொழுது "சமூக நீதி"க் காவலனாக மக்கள் முன் நிற்கிறது.

வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டு அதனைக் கவிழ்த்ததோடு, மண்டலுக்கு எதிராக ராமர் கோயில் ரத யாத்திரைகளை நடத்தி, வடமாநிலங்களை ரத்தக்களறியாக்கிய பா.ஜ.க., இப்பொழுது, மைய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வதை ஆதரிப்பதாகக் கூறுகிறது. தங்களின் வாக்கு வங்கியை விரிவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தம் தான் இந்த இரண்டு பாசிசக் கட்சிகளையும், மண்டலின் மீது திடீர் காதல் கொள்ளத் தூண்டியிருக்கிறது.

எனினும், தண்ணீரை விட இரத்தம் அடர்த்தி மிக்கதல்லவா! அதனால் தான், இந்த இரண்டு கட்சிகளிலும் உள்ள பார்ப்பன - மேல்சாதி தலைவர்கள், இந்த இட ஒதுக்கீட்டை நீர்த்துப் போகச் செய்யும் உள்ளடி வேலைகளில் உடனடியாக இறங்கினார்கள். இவர்களோடு பார்ப்பன - மேல்சாதியைச் சேர்ந்த தொழில் அதிபர்கள், அரசு அதிகாரிகள், பத்திரிகைகள் இணைந்து, பார்ப்பன - மேல்சாதி மாணவர்களைத் தூண்டிவிட்டு, மீண்டும் 1990 காலகட்டத்தை உருவாக்கி விடத் துடிக்கிறார்கள்.

இந்த இட ஒதுக்கீடு அறிவிப்புக்கு எதிராக தில்லியில் மட்டுமே தொடர்ந்து நடைபெற்று வரும் "போராட்டம்", ஏதோ வடஇந்தியா முழுவதும் நடப்பது போல ஊதி பெருக்கப்படுகிறது. ஒரிசா பழங்குடி மக்களின் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டை பத்தோடு பதினொன்றாகப் பதிவு செய்த பார்ப்பன ஊடகங்கள், மும்பய் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் நடத்திய தடியடியை ஜாலியன் வாலாபாக் படுகொலையோடு ஒப்பிட்டு உருவேற்றுகின்றன. மேல்சாதித் திமிரோடும், வக்கிரத்தோடும் அவர்கள் நடத்தும் ஆபாசக் கூத்துக்கள் (தரையைக் கூட்டுவது, ஷூ பாலிஷ் போடு

"டெக்கான் கிரானிக்கல்" என்ற ஆங்கில நாளிதழ் வெளியிட்ட இக்கேலிச் சித்திரம், "மாடு மேய்ப்பவனெல்லாம் இனி ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., ஏ.ஐ.ஐ.எம்.எஸ்.-இல் சேரலாம்" என பார்ப்பனத் திமிரைப் பச்சையாகக் கக்கியது.






படிப்பகம்

www.padippakam.com

வது) நாட்டு நலன் கருதி நடைபெறும் போராட்டங்களாகத் திரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதற்கு எதிர்வினையாக இட ஒதுக்கீட்டை ஆதரித்து, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமின்றி, பல்வேறு சனநாயக அமைப்புகளும் போராடத் தொடங்கியுள்ளன.




ஒடுக்கப்பட்ட சாதியினரையும், உடல் உழைப்பையும் கேவலப்படுத்தும் மேல்சாதி மாணவர்களின் திமிரை - வக்கிரத்தை, பார்ப்பனப் பத்திரிகைகள் தெருக் கூட்டும் போராட்டமாகச் சித்தரித்தன.

•••

"குடியரசு" என டாம்பீகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த நாட்டில், பார்ப்பன-மேல்சாதிக் கொழுப்பு தட்டிக் கேட்க ஆளின்றி பொங்கி வழிவதை இட ஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டங்களே நிரூபிக்கின்றன. இந்தக் கொழுப்பின் சகிக்க முடியாத வக்கிரத்திற்கு "டெக்கான் கிரானிகல்" என்ற ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்ட கேலிச்சித்திரத்தை உதாரணமாகக் கூறலாம்.

"மண்டல் கமிசன்" கல்வி இட ஒதுக்கீடு அமலுக்கு வந்தால், மாடு மேய்க்கும் பயலுகளெல்லாம், ஐ.ஐ.டி.க்குள்ளும், ஐ.ஐ.எம்.க்குள்ளும் நுழைந்து விடுவார்கள்" என உழைக்கும் மக்களைப் பரிகாசம் செய்கிறது, அந்தக் கேலிச்சித்திரம். "எப்படியாவது மீண்டும் குலக்கல்வி முறை வந்து விடாதா?" என்ற பார்ப்பனிய நப்பாசையின் பச்சையான வெளிப்பாடுதான் அந்தக் கேலிச் சித்திரம். "உலகமய"க் காலக் கட்டத்தில் கூட, இப்படி காட்டுமிராண்டித்தனமாகச் சிந்திப்பதற்காக அந்த "மேன்மக்கள்" வெட்கப்படவில்லை.

தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (AIIMS) மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்குகிறதா என்பதே தற்பொழுது சந்தேகத்திற்கு இடமாகி விட்டது. அக்கழகத்தில் பயிலும் பார்ப்பன - மேல்சாதி மாணவர்களும், பயிற்சி மருத்துவர்களும் நடத்தும் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தை அக்கழகத்தின் நிர்வாகமே ஆதரிக்கிறது. அக்கழகத்தின் நிர்வாகம், பார்ப்பனர் சங்கம் போலச் செயல்படுகிறது. அங்கு சிகிச்சைக்காக வரும் ஏழை நோயாளிகளை இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் பேசவிட்டு, தங்களின் அரிப்பைத் தீர்த்துக் கொள்கிறது பார்ப்பன மேல்சாதி கும்பல்.

தனியார்மயத் தாக்குதலுக்கு எதிராக அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபொழுது, அரசையும் பொதுமக்களையும் ஊழியர்கள் மிரட்டுவதாக (Blackmail) நீதிமன்றங்களும், ஆளும் வர்க்க அறிவுஜீவிகளும் குற்றம் சுமத்தினார்கள். ஆனால், இப்பொழுது ஏழை நோயாளிகளின் உயிரோடு விளையாடும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக நிர்வாகத்தின் மீது அப்படிப்பட்ட குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. அவர்கள் மீது அத்தியாவசிய பணி பாதுகாப்புச் சட்டம் பாயவில்லை. இந்த மென்மையான அணுகுமுறைக்கு, பார்ப்பன பாசம் தவிர, வேறென்ன காரணமாக இருக்க முடியும்?

"திறமையில் ஒப்புயர்வற்ற தனித் தீவுகள்" என 'தேசிய'ப் பத்திரிகைகளால் புகழப்படும் இந்த உயர்கல்வி நிறுவனங்கள், பார்ப்பனத் தீவுகளாக இருக்கின்றன என்பதே உண்மை. சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) வேலை பார்க்கும் 400 பேராசிரியர்களுள், 282 பேர் (70 சதவீதம்) பார்ப்பனர்கள்; மற்ற உயர் சாதியினர் 40 பேர் (10 சதவீதம்); தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் 22.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருந்தும் கூட, சென்னை - ஐ.ஐ.டி.யில், மூன்று தாழ்த்தப்பட்டவர்கள்தான் (0.75 சதவீதம்) பேராசிரியர்களாக வேலை பார்க்கின்றனர்.

மேற்கு வங்கம் - காரக்புரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர், "நாங்கள் எப்படி மாணவர்களைச் சேர்க்கிறோம் என்பதை வைத்து ஐ.ஐ.டி.யின் தரம் நிர்ணயிக்கப்படவில்லை. எப்படிப்பட்ட மாணவர்களைத் தயாரித்து அனுப்புகிறோம் என்பதுதான் தரத்தை நிர்ணயிக்கிறது" என்கிறார். ஆனால், பார்ப்பன - உயர்சாதி கும்பலோ, இட ஒதுக்கீடு வழங்கினாலே, உயர்கல்வி நிறுவனங்களின் தரம் தரைமட்டமாகி விடும்; திறமைக்கு எதிரான இட ஒதுக்கீடு நாட்டிற்கே எதிரானது" எனக் கூச்சல் போடுகிறது.

இட ஒதுக்கீடால் தரமும், திறமையும் போய்விடும் என்ற பொய்யைத் திரும்ப திரும்பச் சொல்வதன் மூலம், ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த தகுதியே இல்லாத மாணவர்கள் இந்த நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதைப் போலவும், அவர்கள் தேர்வே எழுதாமல் தேர்ச்சி பெற்று பதவியில் அமர்ந்து விடுவதைப் போலவும் ஒரு சித்திரத்தை உருவாக்குகிறார்கள்.

இது அப்பட்டமான பொய். நுழைவுத் தேர்வில் பெற வேண்டிய மதிப்பெண்களில் வழங்கப்படும் சிறிய சலுகையைத் தவிர, வேறெந்த சலுகையும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தரப்படுவதில்லை. அதன்பின் எல்லா மாணவர்களுக்குமான பொது அளவுகோலின்படிதான் இவர்களும் தேர்வெழுதி மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுகிறார்கள்.

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற "திறமையின் தீவுகள்" எல்லாம் நிறுவப்பட்டு, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. ஆனாலும், இந்தியா இன்றும் வறிய நாடாகத்தான் இருக்கிறது. அறிவியல் - தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளைச் சொந்தமாக உருவாக்க முடியாமல், ஏகாதிபத்திய நாடுகளிடம் கையேந்திப் பெற்று வருகிறது. அப்படியென்றால் இந்த ஐம்பது ஆண்டுகளில்

www.padippakam.com

இந்த உயர்கல்வி நிறுவனங்கள் உரு வாக்கியுள்ள பொறியாளர்களில், விஞ் ஞானிகளில், மேலாண்மை நிர்வாகிக ளில், நூற்றுக்குப் பத்து பேர் கூட திறமை சாலிகளாக இல்லை எனச் சொல்ல லாமா? இட ஒதுக்கீடு சலுகை பெறாத வர்களையும் சேர்த்துதான் இந்தக் கேள் வியைக் கேட்கிறோம்.

திறமைக்கு மட்டுமே மதிப்பளிக்க வேண்டும் என்பதால்தான், இராணுவத் தில் இட ஒதுக்கீடு கிடையாது எனப் பார்ப்பனக் கும்பல் வாதாடுகிறது. ஆனால், அந்த அரசு நிறுவனத்தில் தான், பீர் பாட்டிலுக்கும், பொம்பளைக் கும் மயங்கி, இராணுவ இரகசியங்கள் விற்கத் துணியும் தேசத்துரோகிகள் இருப்பதை தெகல்கா ஊழல் அம்பலப் படுத்தியது; பீரங்கி முதல் சவப்பெட்டி வாங்கியது வரை, பல்வேறு ஊழல்க ளில் ''திறமை'' வாய்ந்த உயர்சாதி அதி காரிகள் சம்பந்தப்பட்டிருப்பது அம்பல மாகி, இந்திய இராணுவம் சந்தி சிரித்தது.

பார்ப்பனக் கும்பல் கூறுவது போல இட ஒதுக்கீடு தேசத்திற்கு எதிரானதாக இல்லை. மாறாக, அவர்கள் தூக்கிப் பிடிக்கும் திறமைதான் மக்களுக்கும், நாட்டுக்கும் துரோகம் செய்வதாக இருக்கிறது. மக்களின் வரிப்பணத்தில் இருந்து கொடுக்கப்படும் மானியத்தில் நடக்கும் இந்த உயர்கல்வி நிறுவனங்க ளில் படித்து முடிக்கும் மருத்துவர்கள் - பொறியாளர்களில், எத்தனை பேர் கிரா மப்புறங்களில் உள்ள அரசின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றி வருகிறார்கள்? எத்தனைபேர் அரசின் பொதுப்பணித் துறையில் சேர்ந்திருக்கி றார்கள்? இங்கே படித்து முடித்தவுடன் அமெரிக்காவிற்கும், இலண்டனுக்கும் மூட்டை கட்டும் இந்த ஓடுகாலிதனத் தைதான் 'திறமை' என்ற பெயரில் மூடி மறைக்கிறது, பார்ப்பனக் கும்பல்.

இந்தப் பார்ப்பன மேதாவிகள் ''சமூக நீதி''களின் மேல் அக்கறை உள்ளவர்கள் போல, ''நாடாளுமன்றத் தில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு ஏன் இன்னும் அமல்படுத்தப்பட வில்லை? பிரதமர், முதல்வர் பதவி களில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த

### அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம்:

# பாதிக் கிணறு தாண்டும் தி.மு.க. அரசு

எந்தச் சாதியில் பிறந்தவராக இருப்பினும் தகுதியான நபர் களை இந்துக் கோயில்களில் அர்ச்சகராக்க வகை செய்யும் சட் டத்தை இயற்ற விருப்பதாக தி.மு.க. அமைச்சரவை அறிவித் துள்ளது. 1972-இல் இதே சட்டத்தை தி.மு.க. அரசு கொண்டு வந்தபோது, சங்கர மடம் மற்றும் ஆதீனங்கள் ஒன்றிணைந்து இதற்கெதிரான தீர்ப்பை உச்சநீதி மன்றத்தில் பெற்றன. ஆகம விதிகளின் அடிப்படையில் அமைந்த கோயில்களில் பார்ப்ப னரல்லாத யாரும் அர்ச்சகராக முடியாது என்ற இந்தத் தீண்டா மைக் கோட்பாட்டை 'இந்து மத உரிமை' என்ற பெயரில் அங் கீகரித்தது அன்றயை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு.

சமூக நடவடிக்கைகளில் தீண்டாமை என்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டாலும், இந்து மத விவகாரங்களில் தீண் டாமை மத உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பார்ப்ப னரல்லாதாருக்கு எதிராக மட்டுமின்றி, தமிழ் வழிபாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் எதிராகவும் இந்தத் தீண்டாமை அமல்படுத் தப்பட்டு வருகிறது. ஆகம விதிகள், மரபுகள் என்ற பெயரால் இது நியாயப்படுத்தப்படுகிறது.

அரசியல் சட்டத்தின் பிரிவு 25(1) அரசுக்கு வழங்கும் அதி காரத்தைப் பயன்படுத்தி, தீண் டாமை மத உரிமையல்ல என்பதை நிலைநிறுத்தும் வண்ணம் அரசியல் சட்டத்திருத்தம் செய்யப்பட வேண் டும். இல்லையேல், தற்போது தி.மு.க. அரசு கொண்டு வரவிருக் கும் சட்டமும் பல்வேறு வழக்கு களால் முடக்கப்படும் சாத்தியம் உள்ளது.



தகுதியுள்ள அனைத்துச் சாதியி னரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டத் தில் பெண்களுக்கும் அர்ச்சகராகும் உரிமை வழங்கப்பட வேண்டும். மேலும், அரசு வேலை வாய்ப்பில் வழங்கப்படும் இட ஒதுக்கீட்டு முறை அர்ச்சகர் நியமனத்திலும் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும்.

பெரும்பான்மை மக்களின் மத உரிமை மற்றும் வழிபாட்டு உரி மையை நிலைநிறுத்தும் விதத்தில் தமிழ்நாட்டிலுள்ள கோயில் களில் தமிழில்தான் வழிபாடு என்பதைச் சட்டப்படி நிலைநி றுத்த வேண்டும். சமஸ்கிருதமயமாக்கப்பட்ட கோயில்கள், கட வுளர்கள், ஊர்களின் பெயர்களை அவற்றின் முந்தைய தமிழ்ப் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

ஏற்கெனவே சாதி அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள பார்ப்பன அர்ச்சகர்கள் 'தகுதி' பெற்றவர்களாக அப்படியே நீடித் திருக்க, புதிதாக வரும் பார்ப்பனரல்லாதாருக்கு மட்டுமே 'தகு திக்கான பயிற்சி' என்பது நெறியற்றது. புதிய தமிழ் வழிபாட்டு முறையில் அனைவரும் பயிற்றுவிக்கப்பட்டு, அதில் தேர்வு செய்யப்படுவோர் மட்டுமே அர்ச்சகராக நியமிக்கப்பட வேண் டும்.

ஆகம விதி, மரபு என்ற பெயரில், அர்ச்சகர் பயிற்சி மற்றும் நியமனம் தொடர்பான விவகாரங்களில் பார்ப்பன மடங்களும், ஆதீனங்களும் கொண்டிருக்கும் சிறப்புரிமை ரத்து செய்யப்பட வேண்டும். பார்ப்பனரல்லாதார் - பெண்கள் - தமிழ்மொழி ஆகிய மூன்றின் மீதும் திணிக்கப்பட்டிருக்கும் பார்ப்பனிய ஒடுக்குமுறை ஒருங்கிணைந்த முறையில் முறியடிக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

1993-இல் எமது அமைப்புக ளின் சார்பில் நடத்தப்பட்ட சிறீரங் கம் கருவறை நுழைவுப் போராட் டத்தில் சூத்திரர், பஞ்சமர் என்று இழிவுபடுத்தப்பட்டோருடன் பெண்களும் அவர்கள் எழுப்பிய தமிழ் முழக்கங்களும் இணைந்து தான் அரங்கநாதன் கருவறைக்குள் நுழைந்தனவென்பதையும், தம் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனிய சாதி முறைக்கு எதிராகப் போராடிய பெரியார், அம்பேத்கர் படங்களை யும் எமது தோழர்கள் கருவறைக் குள் ஏந்திச் சென்றார்கள் என்பதை யும் இங்கே நினைவு கூர்கிறோம். இக்கோரிக்கைகளுக்காகப் போராட தமிழ் மக்களை அறைகூவி அழைக் கிறோம்.

*- ம.க.இ.க., தமிழ்நாடு.*


படிப்பகம்

www.padippakam.com

வேண்டியதுதானே?'' என எதிர்வாதம் செய்கிறார்கள்.

நியாயமாகப் பார்த்தால், பார்ப்பன அறிவுஜீவிகள் இந்தக் கேள்வியை முதலில் சங்கர மடத்திடம் தான் கேட்க வேண்டும். சங்கர மடம் உள்ளிட்ட பல்வேறு பார்ப்பன மடங்களிலும், நல்ல வரும்படி வரும் கோயில்களிலும் பல நூறு ஆண்டுகாலமாக பார்ப்பனர்களே மடாதிபதிகளாக-அர்ச்சகர்களாக இருக்கும் சலுகையை ஏகபோகமாக வைத்திருப்பது மட்டும் நியாயமானதா?

கல்வி - வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு சாதி பார்க்கக் கூடாது என தர்க்க நியாயம் பேசுபவர்கள், இதற்கோ பூணூலை மட்டுமே ஒரே தகுதியாக வைத்திருக்கிறார்கள். இந்த 100 சதவீத இட ஒதுக்கீட்டைக் கைவிட விரும்பாத பார்ப்பனக் கும்பல், 2016-க்குள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டையும் ரத்து செய்ய வேண்டும் எனக் கூப்பாடு போடுகிறது.

ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதை எதிர்க்கும் இவர்கள், இந்த நிறுவனங்களில் வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுவதையோ, அந்த இடங்கள் அமெரிக்க டாலர்களுக்காக ஏலம் விடப்படுவதையோ எதிர்ப்பதில்லை. ஏனெனில், வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கான இட ஒதுக்கீடு என்பது, நடைமுறையில் அமெரிக்கா வாழ் ''அம்பி''களுக்கான இட ஒதுக்கீடுதான்.

மேலும், தனியார்-சுயநிதிக் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீடு என்ற பெயரில் பணக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 100 சதவீத இட ஒதுக்கீட்டையும் இவர்கள் எதிர்ப்பதில்லை. தரம், தகுதி, திறமையை முன்வைத்து இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பனக் கும்பலின் வாதத்தில் சாதித் திமிரும், கபடத்தனமும்தான் பொங்கி வழிகிறது.

•••

**பா**ர்ப்பன - மேல்சாதி கும்பல் இட ஒதுக்கீடு எதிர்ப்பு என்ற பெயரில், இந்த நாட்டின் பெரும்பான்மையாக உள்ள ஒடுக்கப்பட்ட சாதியினரை வெளிப்படையாகவே அவமானப்படுத்துகின்றது. பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு அமலாவதைத் தடுப்பதன் மூலம், சமூகத்தின் அனைத்துத்துறைகளிலும் தங்களின் சாதி ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயலுகின்றது. அதேசமயம், ஒடுக்கப்பட்ட சாதியினரைத் தங்களின் வாக்கு வங்கியாகக் கொண்டிருக்கும் சமூக நீதிக் கட்சிகளோ, பார்ப்பனக் கும்பல் நடத்தும் இப்பிற்போக்குத்தனமான கலகத்திற்கு எதிராக உரிய விதத்தில் பதிலடி கொடுக்காமல் முடங்கிக் கிடக்கின்றன.

**படைப்பிலேயே மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு; மனிதர்கள் சமமானவர்கள் இல்லை என்பது பார்ப்பனிய இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை. நவீன தாராளமயமும் மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு எனக் கூறுகிறது. இந்த விதத்தில் பார்ப்பனியமும் தாராளமயமும் இயற்கையாக ஒன்றுபடுகின்றன.**

இருபது ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கேட்டு, நெடுஞ்சாலைகளில் மரங்களை வெட்டிப் போட்டு மறியல் போராட்டங்களை நடத்திய பா.ம.க ராமதாசு, இப்பொழுது மன்மோகன் சிங்கைச் சந்தித்து முறையிடுகிறார். அடிக்கடி தன்னைப் பிற்படுத்தப்பட்டவன் எனக் கூறி அரசியல் அனுதாபம் தேடிக் கொள்ளும் கருணாநிதி, பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தன் கடமையை முடித்துக்கொண்டு விட்டார்.

இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக போலீசு கை காட்டும் இடத்தில் நின்றுகொண்டு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற வரம்பைத் தாண்ட இக்கட்சிகள் மறுக்கின்றன. மேலும், சோனியாவையும் மன்மோகன் சிங்கையும் நம்பும் கையறு நிலைக்குத்தான் இக்கட்சிகள் பிற்படுத்தப்பட்டோரைத் தள்ளிவிட்டுள்ளன.

தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., லல்லு யாதவின் ராஷ்ட்ரீய ஜனதா தளம், நிதிஷ்குமாரின் ஜனதா தளம், அஜீத் சிங்கின் லோக் ஜனதா தளம், முலயம் சிங்கின் சமஜ்வாதி ஆகிய சமூக நீதிக் கட்சிகள் அனைத்தும் பார்ப்பன - பனியா கட்சிகளான காங்கிரசு - பா.ஜ.க.வோடு மாறி மாறி கூட்டணி வைத்துக் கொண்டு தான் ஆட்சி அதிகாரத்தைச் சுவைத்து வருகின்றன. இந்தப் பார்ப்பனர் - பிற்படுத்தப்பட்டோர் கூட்டணியின் காரணமாகத் தான், காங்கிரசு கூட்டணி ஆட்சி உயர் கல்வி நிறுவனங்களில் பொதுப் போட்டிக்கான இடங்களை அதிகரிப்பது என்ற சமரசத் தீர்வை முன்வைக்கிறது. இந்தச் சமரசத் தீர்வு பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு என்பதையே கேலிக் கூத்தாக்குவதோடு, மறைமுகமாக பார்ப்பன-மேல்சாதியினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதாகும். பார்ப்பன-மேல்சாதி கும்பல் இச்சமரசத் தீர்வை அடைவதில் வெற்றி பெற்றுவிட்டால், அவர்கள் அடுத்து தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டையும் காவு கேட்கத் தயங்க மாட்டார்கள்.

•••

**இ**ட ஒதுக்கீட்டைப் பார்ப்பனக் கும்பல் எதிர்ப்பது ஒருபுறமிருக்க, இந்திய அரசு நடைமுறைப்படுத்தும் தனியார்மய - தாராளமய - உலகமயப் பொருளாதாரக் கொள்கை, இட ஒதுக்கீட்டின் அடிப்படைக்கே வேட்டு வைத்துவிட்டது. இட ஒதுக்கீட்டிற்கு எதிரானது என்ற அம்சத்தில் மட்டும் பார்ப்பனியமும் - தனியார்மயமும் ஒன்றுபடவில்லை. அவை இரண்டுமே உடன்பிறவாச் சகோதரர்கள் போன்றவை.

உலகமயம், உலக நாடுகளை ஒடுக்கும் நாடுகள், ஒடுக்கப்படும் நாடுகள் எனக் கூறு போடுகிறுது. அதுபோலவே பார்ப்பனியமும், இந்திய மக்களை ஒடுக்கும் மேல்சாதி, ஒடுக்கப்படும் கீழ் சாதி எனக் கூறு போடுகிறது.

உலகமயம், உள்நாட்டுப் பொருள்கள் தரமற்றவை; பன்னாட்டு நிறுவனப் பொருட்கள்தான் தரமானவை என வகை பிரிக்கிறது. அதுபோலவே, பார்ப்பனியமும் சமூக அடித்தட்டில் கீழ் நிலையில் உள்ள உழைக்கும் மக்களைத் திறமையற்றவர்கள் என்றும்; பார்ப்பன-மேல்சாதியினரைத் திறமையாளர்கள் என்றும் வகை பிரிக்கிறது.

படைப்பிலேயே மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு; மனிதர்கள் சமமானவர்கள் இல்லை என்பது பார்ப்பனிய இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை. நவீன தாராளமயமும் மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு எனக் கூறுகிறது. இந்த விதத்தில் பார்ப்பனியமும், தாராளமயமும் இயற்கையாக ஒன்றுபடுகின்றன.

கல்வி -வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன - மேல்சாதிக் கும்பலுக்கு, டாடா, மிட்டல், நாராயணமூர்த்தி போன்ற தரகு முதலாளிகள் ஆதரவளிப்பதற்கு இந்த ''இயற்கை உறவு''தான் காரணம்.

www.padippakam.com

தனியார் தொழில்களில் ஒடுக்கப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனக் கோரினால், ''உலகச் சந்தையில் போட்டி போட திறமை வேண்டும்; இட ஒதுக்கீடு அந்தத் திறமையை ஒழித்து விடும்'' எனப் பார்ப்பனக் கும்பல் போலவே இவர்களும் ஒப்பாரி வைக்கிறார்கள். புதுத் தரகு முதலாளியான இன்ஃபோசிஸ் நாராயண மூர்த்தி, ''ஒடுக்கப்பட்ட சாதியினர் போட்டி போடும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' எனப் பச்சையாக பார்ப்பனிய விஷத்தைக் கக்குகிறார்.



இட ஒதுக்கீடுக்கு ஆதரவாக சென்னையில் நடந்த மனிதச் சங்கிலி 'போராட்டத்தில்' கலந்து கொண்ட (வலமிருந்து) நெடுமாறன், கிருஷ்ணசாமி, நல்லக்கண்ணு, தா.பாண்டியன், கி.வீரமணி மற்றும் பலர்: நீர்த்துப் போன சடங்குத்தனமான எதிர்ப்பு.

இந்தியாவின் ஏதாவதொரு ''பின் தங்கிய'' மாவட்டத்தில் தொழில் தொடங்குவதற்கு அரசிடமிருந்து பல்வேறு சலுகைகளை எதிர்பார்க்கும் இந்தத் தரகு முதலாளிகள், ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு இட ஒதுக்கீடு சலுகை வழங்கக் கோரினால், ''தகுதி'', ''திறமை'' பற்றிப் பேசுவது, அப்பட்டமான பித்தலாட்டமாகும்.

அரசு அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள பார்ப்பனியத்தோடு கூட்டு வைத்துக் கொள்ளும் ''தலித்'' கட்சிகளும், பிற்படுத்தப்பட்ட சாதிக் கட்சிகளும் இன்னொருபுறம் தனியார் மயத் தாசர்களாகவும் இருக்கிறார்கள். ''பன்னாட்டு நிறுவனங்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததில் யாருக்கு முதலிடம்?'' என்ற போட்டி பார்ப்பன ஜெயாவுக்கும், சூத்திரர் கருணாநிதிக்கும் இடையே நடந்ததைத் தமிழக மக்கள் அதற்குள் மறந்திருக்க முடியுமா?

தன்னுடைய கொள்ளை இலாபத்திற்கு குறுக்கே நிற்கும் பணிப் பாதுகாப்பு, ஓய்வூதியம், தொழிற்சங்க உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் தனியார்மயத்தை ஆதரிப்பவர்கள், சமூக நீதி என்ற பெயரில் இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் குரல் கொடுப்பது இரட்டை வேடமாகாதா? ஒரு வர்க்கத்திற்கு ஒரு நீதி என்று பேசும் தனியார்மயத்தை ஆதரிப்பவர்கள், ஒரு குலத்திற்கு ஒரு நீதி எனும் பார்ப்பனியத்தை எதிர்க்க முடியுமா?

•••

பார்ப்பனியத்திற்கும், பிற்பட்ட சாதியினருக்கும் இடையே உள்ள கூட்டணி அரசியல் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கிராமப்புறங்களில், பார்ப்பன மனுநீதியைக் காக்கும் காவலர்களாக இப்''பிற்பட்ட சாதியினர்'' இருந்து வருகின்றனர் - தேவர், வன்னியர், கவுண்டர், யாதவர், குர்மி, வோக்கலிகா போன்ற இடைநிலைச் சாதிகள் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தும் தாக்குதல்கள் இதை நிரூபிக்கின்றன.

சூத்திரன் யார் என்பதற்கு மண்டல் கமிசன் அறிக்கையில் தெளிவான விளக்கம் கிடையாது. மண்டல் அறிக்கையில் இந்தியா முழுவதும் 3,740 சாதிகள் பிற்பட்ட சாதிகளாக இனம் காணப்பட்டன. 1995-க்குப் பின் இப்பட்டியலில் மேலும் 700 சாதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. (ஆதாரம், வல்லினம் பிப்.-ஏப். 2006, பக்: 27) பார்ப்பனர்களுக்குக் கீழ்நிலையில் இருந்தாலும், சமூகப் பொருளாதார உரிமைகளைப் பெற்று முன்னேறியுள்ள இடைநிலைச் சாதிகள், தங்களைப் பிற்பட்டோர் பட்டியலில் இணைத்துக் கொண்டு, பார்ப்பனர்களோடு போட்டி போட்டு அரசுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு மண்டல் கமிசன் அறிக்கை அச்சாதிகளுக்கு உதவியாக இருக்கிறது.

உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இட ஒதுக்கீடு அமலுக்கு வரும் பொழுது, இந்த இடைநிலை ஆதிக்க சாதிகள்தான் அதன் பலனை அறுவடை செய்து கொள்வார்கள். பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள நாவிதர், வண்ணார், குயவர் போன்ற சேவை சாதியினர், ஒரு சமூகம் என்ற வகையில் அதன் பலனை அனுபவிக்க முடியாது.

அதேசமயம், ''இட ஒதுக்கீடு என்பது இந்த சமூக அமைப்புக்குள்ளேயே எல்ல மக்களும் முன்னேறி விட முடியும் என்ற மாயையைத் தோற்றுவிக்கும் சீர்திருத்தம்தான்'' என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. வறுமை, வேலைவாய்ப்பு இன்மையால் இன்று இந்திய நாடே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அதனைத் தணிக்கும் வடிகாலாகத்தான் தனியார் தொழில்களில் இட ஒதுக்கீடு, தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு ஆகிய சீர்திருத்தங்கள் ஆளும் வர்க்கத்தாலேயே கொண்டு வரப்படுகின்றன.

பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களின் பாரம்பரியத் தொழில்களான விவசாயம், கைத்தறி, கைவினைத் தொழில்கள் தொடங்கி, சில்லரை வணிகம், பழங்குடி மக்களின் நிலம் ஆகிய அனைத்தும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் மறுகாலனியாதிக்கத்தின் கீழ் மக்களின் வாழ்க்கை மேலும் மேலும் நாசமாக்கப்படுகிறது என்பதே உண்மை.

பன்னாட்டு நிறுவனங்கள் - தரகு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் நலன்களை முன்னிறுத்தி நடந்துவரும் இந்த ஆட்சியில் இட ஒதுக்கீட்டின் மூலம் உயர் பதவிகளுக்குச் செல்வோர் யாராக இருந்தாலும், மக்களுக்குச் சேவை செய்ய முடியாது. ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவச் சுரண்டலைத் தூக்கி எறியும் புதிய ஜனநாயகப் பரட்சியின் மூலம் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டுவது மட்டும்தான் உண்மையான சமூக நீதியைப் படைக்கும். தனியார்மயம் - பார்ப்பனியம் இவை இரண்டுக்கும் எதிராகக் கலகத்தில் இறங்குவதன் மூலம்தான் சமூக நீதியை வென்றெடுக்க முடியும்!

• செல்வம்

www.padippakam.com

# நக்சலைட்டு தேடுதல் வேட்டை:

# அரசே உருவாக்கிய உள்நாட்டுப் போர்!

ஆளரவமற்ற அடர்ந்த காடு. இரு புறமும் புதர்கள் மண்டிய ஒற்றையடிப் பாதையில் அம்மண்ணின் மைந்தரான மார்விந்தாவும் அவரது குடும்பமும் தமது கிராமத்தை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தனர். தமது வீட்டையும் தோட்டத்தையும் பார்த்து விட்டு மாலைக்குள் திரும்பிவிட வேண்டுமென்ற அவசரத்தில் அவர்கள் வேகமாக நடந்தனர். இருளிபலாம் கிராமத்தை அடைந்த போது துக்கம் அவர்களது தொண்டையை அடைத்தது. அங்கே எரிந்து சாம்பலாகிக் கிடக்கும் தமது குடிசையைக் கண்டதும் ''ஓ''வெனக் கதறி அழுதனர். பின்னர் ஒருவாறு தேற்றிக் கொண்டு, தமது குடிசையை ஒட்டியுள்ள தோட்டத்தில் முளைவிட்டுள்ள கிழங்குகள் - பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றி, வேலிகளைச் சரிசெய்து விட்டு கனத்த இதயத்துடன் நிவாரண முகாமுக்குத் திரும்பினார்.

நேற்றுவரை அவர்கள் சட்டிஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் வட்டாரத்திலுள்ள இருளிபலாம் கிராமத்தில் வாழ்ந்த பழங்குடியின மக்கள். இன்று, அவர்கள் அங்கு வாழ முடியாத அகதிகள். இப்போது அவர்கள் இக்காட்டுப் பகுதி கிராமத்திலிருந்து 10 கி.மீ தொலைவிலுள்ள ஷெல்னார் எனும் சந்தை நகரிலுள்ள அகதி முகாமில் அரசாங்கத்தால் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே அவர்கள் தங்கள் கிராமத்துக்குச் சென்று நிலத்தைப் பார்த்துவிட்டு வர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

''கடந்த ஆண்டு அக்டோபரில் அந்த அட்டூழியம் நடந்தது. எங்கள் கிராமத்தை போலீசாரும் குண்டர்களும் முற்றுகையிட்டு துப்பாக்கி முனையில் எங்களைக் கட்டாயமாக வெளியேற்றினர். நான் வெளியேற முடியாது என்று மறுத்து வாதாடினேன். போலீசார் என்னை மிருகத்தனமாக அடித்தனர். என் கைகளைப் பின்புறமாகக் கட்டித் தலைகீழாக மரத்தில் தொங்கவிட்டு அடித்தனர். போலீசாருடன் வந்த ''சல்வாஜுடும்'' என்ற பெயரிலான குண்டர்கள் எங்களது குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். கிராமத்தை விட்டு வெளியேறாவிட்டால், உங்களை நக்சலைட்டுகள் என்று கூறிச் சுட்டுக் கொன்று விடுவோம் என்று எச்சரித்து எங்களைச் சித்திரவதை செய்தார்கள். வேறு வழியின்றி நாங்கள் கிராமத்தைவிட்டு வெளியேறி அகதிமுகாமில் வதைபடுகிறோம்'' என்று விம்முகிறார் மார்விந்தா.

மார்விந்தாவைப் போலவே பல்லாயிரக்கணக்கான சட்டிஸ்கர் மாநில பழங்குடியின மக்கள் தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த காட்டுப் பகுதிகளை விட்டு கட்டாயமாக வெளியேற்றப்பட்டு அரசாங்க அகதி முகாம்களில் அல்லற்படுகின்றனர். இவ்வாறு காடுகளை விட்டு வெளியேற மறுத்த குற்றத்திற்காக சல்வாஜுடும் குண்டர்களால் ஏறத்தாழ 250 பழங்குடியின மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். சல்வாஜுடும் இயக்கத்தில் சேர மறுத்ததற்காக 60-க்கும் மேற்பட்ட கிராமங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

சல்வாஜுடும் என்பது என்ன? எதற்காக பழங்குடியின மக்களை அவர்கள் வதைக்கிறார்கள்? அரசாங்கம் எதற்காக பழங்குடியின மக்களைக் காடுகளை விட்டு வெளியேற்றி நிவாரண முகாம்களில் அடைத்து வைக்கிறது? மறுகாலனியாதிக்கம் - அரசு பயங்கரவாதம், இவற்றுக்கு எதிரான புரட்சிகர இயக்கங்களின் போராட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய கேள்விகளே இவை.

சட்டிஸ்கர் மாநிலத்தின் தெற்கே ஆந்திராவை ஒட்டியுள்ள பஸ்தார், கோண்டா வட்டாரங்கள் வனவளமும் தாதுவளமும் நிறைந்த பூமியாகும். இங்கு ''டெண்டூ'' எனப்படும் பீடி இலை பெருமளவில் காட்டுப்பகுதியில் விளைவிக்கப்படுகிறது. இம்மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்கள் அற்பக் கூலிக்கு பீடி இலைகளைப் பறித்துக் கொடுத்துவிட்டு வறுமையில் உழல்கின்றனர். வனத்துறை அதிகாரிகளின் ஊழல் - ஒடுக்குமுறை, பீடி இலைகளைக் கொள்முதல் செய்யும் வர்த்தக ஒப்பந்தக்காரர்களின் அற்பக்கூலி - அடிமைத்தனங்களுக்கு எதிராகவும் இப்பழங்குடியின மக்களின் வாழ்வுரிமைக்காகவும் நீண்ட நெடுங்காலமாக நக்சல்

நக்சலைட்டுகளை ஒழிப்பதற்காகவே, கிராமங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு தொர்ணாபால் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்கள்.




படிப்பகம்

www.padippakam.com

பாரிப் புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

மேலும், இந்த வட்டாரம் இரும்புத்தாது வளமிக்கதாகும். இப்பகுதியின் இரும்புத்தாதுவில் அதிகபட்சமாக - அதாவது 68% அளவுக்கு இரும்புச்சத்து உள்ளது. அருகிலேயே ஷாப்ரி என்னும் வற்றாத நதி பாய்கிறது. எனவே, இப்பகுதியின் மண்ணின் மைந்தர்களை விரட்டியடித்துவிட்டு இங்கு எஃகு ஆலை நிறுவிச் சூறையாட எஸ்ஸார் ஸ்டீல், டாடா, மித்தல் முதலான தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் இறங்கியுள்ளன. சட்டீஸ்கர் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இம்மறுகாலனியாதிக்கச் சூறையாடலுக்கு எதிராக நக்சல்பாரி புரட்சியாளர்கள் விழிப்புணர்வூட்டி பழங்குடியின மக்களை அணிதிரட்டி வருகிறார்கள்.

இதன் காரணமாகவே, தரகுப் பெருமுதலாளிகளும் காடுகளைச் சூறையாடும் நிலப்பிரபுக்களும் பீடி இலை ஒப்பந்தக்காரர்களும் பழங்குடியின மக்களையும் அவர்களது வாழ்வுரிமைக்காகப் போராடிவரும் நக்சல்பாரிகளையும் ஒழித்துக் கட்டுவதில் ஓரணியில் நிற்கிறார்கள். அவர்களது நலன் காக்கும் மைய அரசும் மாநில அரசும் பின்தங்கியுள்ள சட்டீஸ்கர் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு நக்சல்பாரிகள் தடையாக் இருப்பதாகக் குற்றம் சாட்டி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன,

இருப்பினும், அடக்குமுறைகளைத் துச்சமாக மதித்து நக்சல்பாரி இயக்கம் விரிவடைந்து முன்னேறுகிறது. புரட்சிகர சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதால் நக்சல்பாரி இயக்கத்தினரை விலை பேசவோ பிளவுபடுத்தவோ ஆளுங்கும்பலால் முடியவில்லை. எனவேதான், பழங்குடியின மக்களைக் கொண்டே பழங்குடியின மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் நக்சல்பாரிகளை வீழ்த்துவதற்கான புதிய பயங்கரவாத உத்தியுடன் ஆட்சியாளர்களும் பெருமுதலாளிகளும் கிளம்பியிருக்கிறார்கள். அவர்களது சதியில் உருவான கள்ளக் குழந்தைதான் ''சல்வாஜுடும்'' என்ற அமைப்பு. கோண்ட் வட்டார மொழியில் இதற்கு ''அமைதி இயக்கம்'' என்று பொருள்.

இந்த இயக்கத்தின் நிறுவனர், முன்னாள் அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவருமான காங்கிரசு பிரமுகர் மகேந்திர கர்மா ஆவார். சட்டீஸ்கர் மாநில பா.ஜ.க. முதல்வரான ரமண் சிங், உள்துறை அமைச்சரான ராம் விசார் நேதம் ஆகியோர் மகேந்திர கர்மாவுடன் இணைந்து இந்த இயக்கத்தை வழிநடத்துகின்றனர். ''நக்சல்பாரிகளின் வன்முறைக்கு எதிரான. அமைதி இயக்கம்'' என்று கூறிக் கொள்ளும் இந்த அமைப்பு, உண்மையில் ஒரு பயங்கரவாத அமைப்பு; மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் மாநிலத்தின் பா.ஜ.க. அரசும் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள அரசு பயங்கரவாத அமைப்பு. போலீசு-இராணுவத்தை வைத்து பழங்குடியின மக்கள் மீது அடக்குமுறையை ஏவி காடுகளை விட்டு அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றினால், அரசாங்கம் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் எதிர் கொள்ள நேரிடும்; அம்பலப்பட்டு தனிமைப்பட நேரிடும். எனவே, பழங்குடியின மக்களைக் கொண்டே பழங்குடியின மக்கள் மீது அடக்குமுறையை ஏவி, பீதியூட்டி கட்டாயமாக வெளியேற்றி, தமது மறுகாலனியாதிக்கச் சேவையைத் தொடர காங்கிரசும் பா.ஜ.க.வும் கூட்டணி சேர்ந்து உருவாக்கியுள்ள பயங்கரவாத கைக்கூலிப் படைதான் ''சல்வாஜுடும்''.



சல்வாஜுடுமின் நிறுவனரும் மாநில எதிர்க்கட்சித் தலைவருமான மகேந்திர கர்மா.

பஸ்தார் பிராந்தியத்தில் நக்சல்பாரிகளின் வன்முறையை எதிர்ப்பது என்ற பெயரில் காங்கிரசு தலைவர் மகேந்திர கர்மாவினால் தொடங்கப்பட்ட இந்த அமைப்புக்கு டாடா, மித்தல் முதலான தரகுப் பெருமுதலாளிகளும் பீடி இலை கொள்முதல் ஒப்பந்தக்காரர்களும் கோடிகோடியாய் நிதியளிக்கின்றனர். மாவட்ட நிர்வாகம் மகளிர்சுய உதவிக் குழுக்களைப் போல சல்வாஜுடும் குழுக்களைத் தத்தெடுத்து ஊட்டி வளர்க்கிறது. போலீசும் துணை இராணுவப் படைகளும் ஆயுதப் பயிற்சியளித்து துப்பாக்கிகளை விநியோகிக்கின்றன. சல்வாஜுடும் குழுவில் சேருவோருக்கு மாதம் ரூ. 1500 உதவித் தொகையும் 10 கிலோ இலவச அரிசியும் அரசு வழங்குகிறது. சமூக விரோதிகளும் வேலையற்ற பழங்குடியின இளைஞர்களும் சல்வாஜுடும் குழுக்களாக அணிதிரட்டப்படுகின்றனர். நக்சல்பாரி ஆதரவு கிராமங்கள் எவையெவை, நக்சல்பாரி புரட்சியாளர்கள் யார் யார் என்று போலீசுக்கு ஆள்காட்டியாகச் செயல்படுவதும், முன்னிருந்து தாக்குதல் நடத்துவதும் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலை. அப்பாவி பழங்குடியின கிராமங்களில் அடையாளம் தெரியாமல் தாக்குதல் நடத்திவிட்டு நக்சல்பாரிகள் செய்ததாக பழி போட்டு ஆத்திரமூட்டுவது, அதைத் தொடர்ந்து சல்வாஜுடும் குழுக்களில் அக்கிராமத்தவரை அணிதிரட்டுவது, பின்னர் நக்சல்பாரி ஆதரவு கிராமங்களின் மீது தாக்குதல் நடத்துவது என்பதாக உத்திகளை வகுத்துக் கொடுத்து மாநில போலீசும் நாகா இராணுவப்படையும் இக்குழுக்களை இயக்கி வருகின்றன.

கடந்த ஏப்ரல் 13-ஆம் தேதியன்று நக்சல்பாரி புரட்சிகர போராட்டங்கள் தொடரும் மாநிலங்களின் முதலமைச்சர்களது உயர்மட்டக் கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடந்தது. அக்கூட்டத்திலும், அதற்குமுன் மைய அரசின் உள்துறைச் செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்திலும் சல்வாஜுடும் இயக்கத்தை அரசு அங்கீகரித்து ஆதரித்துள்ளது. தன்னார்வ - சுய உதவிக் குழுக்களைப் போல இத்தகைய நக்சல்பாரி எதிர்ப்பு உள்ளூர் தற்காப்புக் குழுக்களை அவசியமான மாநிலங்களில் கட்டி வளர்த்து அவற்றுக்கு ஆயுதப் பயிற்சியும் பாதுகாப்பும் வழங்க வேண்டுமென்று இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ''நாடு இதுவரை கண்டிராத வகையில், உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக நக்சல்பாரி இயக்கம் வளர்ந்துவிட்டது. நாடு முழுவதும் 160-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இது அரசுக்கு மிகப் பெரும் சவாலாக மாறியுள்ளது'' என்று பீதியுடன் எச்சரிக்கும் பிரதமர் மன்மோகன்சிங், இராணுவ - துணை இராணுவ - போலீசுப் படைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கவும், நக்சல்பாரிகளின் செல்வாக்குள்ள பகுதிகளில் வளர்ச்சித்திட்டப் பணிகளை முடுக்கி விடவும் ஆவன செய்வதாக அறிவித்துள்ளார். பஞ்சாபின் முன்னாள் அரசு பயங்கரவாதியான கே.பி.எஸ்.கில், நக்சல்பாரி ஒழிப்புப் போரில் ஈடுபட்டுள்ள போலீசு அதிகாரிகளுக்கு வழிகாட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, அவர் சட்டீஸ்கருக்கு ஹெலிகாப்

www.padippakam.com

டரில் பறந்து கொண்டிருக்கிறார்.

ஒருபுறம், போலீசு-துணை இராணுவப்படைகள் மூலம் தாக்குதல்; மறுபுறம், சல்வாஜூடும் எனும் பழங்குடியின பயங்கரவாத அமைப்பின் மூலம் தாக்குதல் என நக்சல்பாரிகளுக்கும் பழங்குடியின மக்களுக்கும் எதிராக சட்டிஸ்கரில் ஒரு உள்நாட்டுப் போரை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். கடந்த 2005-ஆம் ஆண்டில் சல்வாஜூடும் என்ற பயங்கரவாத இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஏறத்தாழ 400 பழங்குடியின மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் கோண்டா மாவட்டத்தில் மட்டும் 216 பேர் பலியாகியுள்ளனர். 80-க்கும் மேற்பட்ட கிராமங்கள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டுள்ளன. பல பகுதிகளில் பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர். சிறுவர்களும் முதியவர்களும் கூட கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். காடுகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டு ஏறத்தாழ 30,000 பழங்குடியின மக்கள் அகதி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். கோண்டா மாவட்டம் மட்டுமின்றி, தோர்னபால், தந்தேவாடா, பிஜாப்பூர், ஜெக்தல்பூர், கன்கெர் முதலான மாவட்டங்களில் இத்தகைய முகாம்கள் பெருகியுள்ளன.

சல்வாஜூடும் அமைப்பைக் கொண்டு அரசு நடத்திவரும் இப்பயங்கரவாத அட்டூழியங்களை மூடிமறைத்து விட்டு, "நக்சலைட்டுகளுக்கு எதிராக பழங்குடியின மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள்; மக்கள் யுத்தம் பரவுகிறது" என்று ஆளும் கும்பலும் தேசிய பத்திரிகைகளும் வெறித்தனமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன. சல்வாஜூடும் குண்டர்களின் பயிற்சி முகாம்கள் மீது நக்சல்பாரிகள் தாக்குதல் நடத்தினாலோ, அல்லது போலீசுடனான 'மோதலில்' அப்பாவி பழங்குடியின மக்கள் கொல்லப்பட்டாலோ, அதைக் காட்டி பழங்குடியினரை ஆத்திரமூட்டி, அவர்களை சல்வாஜூடும் அமைப்பில் சேர்த்துக் கொண்டு மீண்டும் தாக்குதல் நடத்துவது என்பதாக அரசு பயங்கரவாதிகள் உள்நாட்டுப் போரைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

இது ஏதோ நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்துக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கை மட்டுமல்ல; இது மறுகாலனியாதிக்க ஆக்கிரமிப்புப் போர். மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்களை விரட்டியடித்துவிட்டு, காடுகளையும் தாதுவளங்களையும் தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் கைப்பற்றிச் சூறையாடுவதற்காக நடத்தும் போர். அன்று, வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொண்ட அதே உத்தியுடன் தான் இந்தப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதாவது, மக்கள் எனும் கடலில் நீந்தும் மீன்களாகிய கம்யூனிசப் புரட்சியாளர்களைப் பிடிக்க, நீரை வெளியேற்றுவது என்ற உத்தியுடன் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வியட்நாம் கிராமப்புறங்களில் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி, மக்களைக் கட்டாயமாக வெளியேற்றி, கம்யூனிஸ்டுகளையும் நாட்டுப் பற்றாளர்களையும் வேட்டையாட முற்பட்டனர். ஆனால், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை முறியடித்து நாட்டு விடுதலைப் போரில் வியட்நாம் வெற்றி பெற்றது. பெருந்தோல்வியில் முடிந்த அந்த அமெரிக்க உத்தியுடன் கிளம்பியுள்ள இந்திய அரசு பயங்கரவாதிகள், இப்போது நக்சல்பாரிகளைப் பிடிக்க பழங்குடியின மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைக் கட்டாயமாக காடுகளிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



தண்டேவாடா மாவட்டத்திலுள்ள ஒரு முகாமில், ஆயுதப் பயிற்சியில் ஈடுபடும் சல்வாஜூடும் குண்டர் படை.

ஆனால், அரசு பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகளும், சதிகளும் மெதுவாகக் கசியத் தொடங்கி மனித உரிமை - ஜனநாயக உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்து, இப்பயங்கரவாத உள்நாட்டுப் போரை உடனடியாக நிறுத்துமாறு எச்சரித்துள்ளன. புலனாய்வு பத்திரிகைகள் பஸ்தார் பிராந்தியத்துக்கு நேரில் சென்று உண்மை நிலைமையை விளக்கி அரசு பயங்கரவாதிகளின் கோரமுகத்தை அம்பலப்படுத்தி வருகின்றன. பஸ்தார் வட்டார வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான மனிஷ் கன்ஜாம் என்பவர், "பழங்குடியினர் நக்சல்பாரிகளுக்கு எதிராகப் போராடுவதாகக் கூறுவது முழுப் பொய். நக்சல்பாரிகளின் வழிமுறைகளில் எமக்கு உடன்பாடில்லை என்பதற்காக, சல்வாஜூடும் அமைப்பின் அட்டூழியங்களை நாங்கள் ஒருபோதும் ஆதரிக்க முடியாது" என்கிறார். இது தவிர, பல்வேறு கல்வியாளர்களும் சமூகவியலாளர்களும் அரசின் பயங்கரவாத உள்நாட்டுப் போரை உடனே நிறுத்தக்கோரி பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அன்று, இந்திய உழைக்கும் மக்களை சாதி, மத, இன ரீதியாகப் பிளவுபடுத்தி மோதவிட்டு பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் காலனியாதிக்கத்தை நிறுவியது, வெள்ளை ஏகாதிபத்தியம். இன்று, பழங்குடியின மக்களைக் கொண்டே பழங்குடியின மக்கள் மீது உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்து விட்டு இயற்கை வளங்களைச் சூறையாடக் கிளம்பியுள்ளது, மறுகாலனியாதிக்கம். இப்பயங்கரவாத சூழ்ச்சிகள் - சதிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதும், மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் அவசர - அவசியக் கடமையாகியுள்ளது.

● மனோகரன்

www.padippakam.com

## காசுமீர்:

# தேசப் பாதுகாப்பின் பெயரால் காமவெறி பயங்கரவாதம்

இந்தியாவின் அறிவிக்கப்படாத காலனியாக உள்ள காசுமீரில் இப்போது வெடித்துக் கிளம்பியுள்ள விபச்சார பூகம்பம், 'தேசபக்தி'யின் பெயரால் நடக்கும் காமவெறி பயங்கரவாதத்தைத் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

கடந்த மார்ச் மாத மத்தியில் சிறீநகரின் கா்ஃபாலி மொஹல்லா பகுதியைச் சேர்ந்த 15 வயதான பள்ளி மாணவி யாஸ்மீனாவின் நீலப்பட சி.டி. இப்பகுதியில் புழங்குவதாகக் கூறி, அப்பகுதியைச் சேர்ந்த சில பெரியவர்கள் போலீசு நிலையத்தில் புகார் செய்து நடவடிக்கை எடுக்கக் கோரினர். போலீசார் அந்த இளம் பெண்ணையும் அவரது பெற்றோரையும் அழைத்து விசாரித்து போது, சபீனாபேகம் என்ற பெண் தனக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி போதை மருந்து கொடுத்து நிர்வாணப் படம் எடுத்து, அதைக் காட்டி மிரட்டி விபச்சாரத்தில் ஈடுபடுத்தி நீலப்படம் எடுத்ததாகவும், உயர் போலீசு - இராணுவ அதிகாரிகளுக்கு தான் இரையாக்கப்பட்டதையும், வெளியே சொன்னால் சுட்டுக் கொன்றுவிட்டு தீவிரவாதிகள் கொன்றதாகக் கதை கட்டி விடுவோம் என்று அச்சுறுத்தியதாகவும், தன்னைப் போல் 50-க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் இப்பயங்கரவாத கும்பலிடம் சிக்கித் தவிப்பதாகவும் யாஸ்மீனா வேதனையுடன் கூறியுள்ளார். இந்த விபச்சார கும்பலின் வாடிக்கையாளர்களாக உள்ள அமைச்சர்கள், அரசியல்வாதிகள், போலீசு-இராணுவ உயரதிகாரிகளின் பட்டியலையும் அவர் வாக்குமூலமாகத் தெரிவித்துள்ளார்.

அதிர்ச்சியில் உறைந்து போன போலீசார், முதலமைச்சர் குலாம்நபி ஆசாத்துக்குத் தகவல்களைத் தெரியப்படுத்திவிட்டு உளவுத்துறை போலீசாரைக் கொண்டு விசாரணையில் இறங்கினர். சபீனாபேகம் ஒரு விபச்சார தாதா என்பது ஏற்கெனவே போலீசாருக்குத் தெரியும். இப்போது மீண்டும் சபீனா விவகாரம் வெடித்ததும், வேறு வழியின்றி இதில் சம்பந்தப்பட்ட இரு போலீசு கண்காணிப்பாளர்களை இடமாற்றம் செய்து விட்டு, உளவுத்துறை போலீசார் சபீனாவின் விபச்சார மாளிகையில் ரெய்டு நடத்தி பல இளம்பெண்களை மீட்டனர். அதைத் தொடர்ந்து ஏப்ரல் இறுதியில் சபீனாவும் அவரது தொழில் கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர். வழக்கம் போலவே இந்த விவகாரத்தை மூடிமறைத்துவிட உயர் போலீசு அதிகாரிகள் எத்தனித்த சூழலில், சிறீநகர மக்கள் ஆவேசமாகப் போராட்டத்தில் குதித்தனர். மே 5-ஆம் தேதியன்று சிறீநகர் முழுவதும் கடையடைப்பு போராட்டத்தை நடத்திய மக்கள், ஹப்பா கடால் பகுதியிலுள்ள சபீனாவின் நான்குமாடி வீட்டை அடித்து நொறுக்கி அங்கிருந்த பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். வீதிகளில் திரண்டு போராடிய மக்கள் மீது தண்ணீரைப் பீச்சியடித்தும் தடியடி நடத்தியும் போலீசார் விரட்டத் தொடங்கியதும், ஆத்திரமடைந்த மக்கள் போலீசார் மீது கல்லெறிந்து தொடர்ந்து போராடினர். சிறீநகரில் தொடங்கிய போராட்டம் காசுமீர் முழுவதும் பற்றிப் பரவத் தொடங்கியதும், மாநில உயர்நீதி மன்றம் இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து விசாரணைக்கு உத்தரவிட்டு, மையப் புலனாய்வுத் துறையிடம் வழக்கை ஒப்படைத்துள்ளது.

இது ஏதோ காசுமீரில் மட்டும் நடந்த விவகாரமல்ல; தமிழகத்தில் 'ஆட்டோ' சங்கர், அதன் பின்னர் கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரா, பஞ்சாப் என்று நாடு தழுவிய அளவில் விபச்சார கிரிமினல் குற்றக் கும்பல்களின் அட்டூழியங்கள் அடுத்தடுத்து வெளிவந்து நாறிப் போயுள்ளது. இவை எல்லாவற்றிலுமே அரசுயர் அதிகாரிகள், போலீசு அதிகாரிகள், சர்வ கட்சி பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருப்பது அம்பலமாகியுள்ளது. இருப்பினும் காசுமீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நடக்கும் இதுபோன்ற அட்டூழியங்கள் தேசபக்தி, தேசிய பாதுகாப்பு, தேச நலன், தேச ஒற்றுமை என்ற பெயரால் திட்டமிட்டே மூடிமறைக்கப்பட்டு வருகிறது. தீவிரவாதத்தை முறியடிப்பது, பயங்கரவாதத்தை முறியடிப்பது, எல்லைப் பாதுகாப்பு என்ற போர்வையில் இம்மாநிலங்களில் இந்திய இராணுவமும், போலீசும் நடத்திவரும் காமவெறி - கொலைவெறியாட்டங்கள் தொடர்ந்து மூடிமறைக்கப்படுகின்றன. மெதுவாகக் கசிந்து அம்பலமானாலும், 'தேசநலன்' கருதி 'தேசிய' பத்திரிகைகள் இவற்றை இருட்டடிப்பு செய்து விடுகின்றன.

வீரப்பனைப் பிடிப்பது என்ற பெயரில் அதிரடிப்படையின் காமவெறி - கொலை வெறியாட்டங்கள் மூடிமறைக்கப்பட்டது போலவே நாடெங்கும் நடக்கும் போலீசு - இராணுவத்தின் அட்டூழியங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. மணிப்பூரில் இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாதம் மூடி மறைக்கப்பட்ட நிலையில் மணிப்பூர் தாய்மார்கள் இராணுவத் தலைமையகம் எதிரே நிர்வாணமாகப் போராடியபோது தான், உண்மைகள் மெதுவாக வெளிவரத் தொடங்கின. ஆனாலும் இன்று வரை அக்காமவெறி பயங்கரவாதிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

**போலீசு-இராணுவ பயங்கரவாதக் கும்பலின் காமவெறியாட்ட பங்களாவை அடித்து நொறுக்கும் காசுமீர் மக்களின் போர்க் கோலம்.**



இந்திய இராணுவமும் போலீசும் தமது காமவெறி அட்டூழியங்களை மறைக்கப் பயன்படுத்தும் ஆணுறைதான் தேசபக்தி. போர்த்திக் கொள்ளும் போர்வைதான் தீவிரவாத - பயங்கரவாத எதிர்ப்பு. எங்கெல்லாம் தீவிரவாதம் - பயங்கரவாதம் என்ற பெயரில் இராணுவமும் போலீசும் நுழைகிறதோ, அங்கெல்லாம் காம வெறி பயங்கரவாத அட்டூழியங்களும் விபச்சார கிரிமினல் கும்பல்களின் அட்டகாசங்களும் தலைவிரித்தாடுகின்றன. நேற்று மணிப்பூர், இன்று காசுமீர் என்று தேசபக்தியின் பெயரால் அரசு பயங்கரவாத வெறியாட்டங்கள் தொடர்கின்றன.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரம்:
# புரட்சிப் பாதையில் பீடுநடை

ஓட்டுப் பொறுக்கிகளின் அனல் பறக்கும் பிரச்சாரத்துக் கிடையே, ''ஓட்டுப் போடாதே! புரட்சிசெய்!'' என்ற முழக்கத் துடன் தமிழகமெங்கும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை வீச்சாக கடந்த ஏப்ரல் - மே மாதங்களில் நடத்தின. ஓட்டுப் போடுவதும் ஓட்டுப் போடாமல் தேர்தலைப் புறக்கணிப்பதும் மக்களின் அடிப் படை ஜனநாயக உரிமை. ஆனால், தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்வதையே ஏதோ சட்டவிரோத - தேசவிரோத பயங்கரவாதச் செயலாகச் சித்தரித்து, போலீசு பல பகுதிகளில் தடைவிதித்ததோடு, முன்னணியாளர்கள் மீது பொய்வழக்கு சோடித்து கைது செய்து சிறையில் அடைத்தது.

ஒசூரில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்த 'குற்றத் திற்காக பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த பரசுராமன், சீனு, இரவிச் சந்திரன் ஆகிய தோழர்கள் அரசைக் கவிழ்க்கச் சதி செய்த தாக பொய் வழக்கு சோடிக்கப்பட்டு சிறையிடப்பட்டனர். திருப்பத்தூர் அருகே கந்திலியைச் சேர்ந்த வி.வி.மு. தோழர் பெரியசாமி, கிருஷ்ணகிரி மாவட்டம் நாட்றாம்பாளையம் வி.வி.மு. தோழர் சக்தி ஆகியோர் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு, பொய் வழக்கு சோடிக்கப்பட்டு சிறையி டப்பட்டனர். தர்மபுரியில் ''போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!'' என்ற அறைகூவலுடன் தட்டி கட்டிய தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இதுதவிர துண்டுப் பிரசு ரங்களையும், ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற சிறு வெளியீட்டையும் பிரச்சாரம் செய்து விநியோகித்த போதும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட் டனர். கோவை, திருச்சி, உடுமலை, சிவகங்கை, கடலூர், நெய் வேலி ஆகிய ஊர்களில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் சட்டவிரோதமானது என்று எழுத்துப்பூர்வமாக அறிவித்த போலீசு, துண்டுப் பிரசுரம் விநியோகிக்கக் கூட தடை விதித் தது. இருப்பினும் இச்சட்ட விரோத அடக்குமுறை - அச்சுறுத் தல்களைத் துச்சமாக மதித்து தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை இப்புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரித்தான வீரியத்தோடு நடத்தியுள்ளன.

''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' எனும் சிறு வெளியீடு ஏறத்தாழ 40,000 பிரதிகள் இப்புரட்சிகர அமைப்புகளால் மக்களிடம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பல வடிவங்க ளில், பல பத்தாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் மக்களி டம் விநியோகிக்கப்பட்டுள்ளது. சென்னை, தஞ்சை, மதுரை, நெய்வேலி, நாமக்கல், ஒசூர் ஆகிய நகரங்களில் 15-க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட் டங்களும் பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சிகளும் நடத்தப் பட்டுள்ளன.

**திருச்சியில்** தெருமு னைக் கூட்டங்கள் கூட தடை விதிக்கப்பட்ட நிலையில், தேர்தல் புறக்கணிப்பு அரசி யல் முழக்கங்கள் ஒட்டப் பட்ட பெரிய அட்டைப் பெட் டிகளைத் தலையில் கவிழ்த் துக் கொண்டு பேருந்து நிலை யம், கடைவீதிகளில் பிரசுரங்களை விநியோகித்தபடியே தோழர்கள் பிரச்சாரம் செய்தனர். புதிய வடிவிலான இப்பிரச் சாரத்தை உழைக்கும் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றதோடு, சில நாளேடுகளும் இதனை புகைப்படத்துடன் செய்தியாக வெளியிட்டன. இதே பாணியில், விழுப்புரம் பேருந்து நிலை யத்தில் பெண்கள் - சிறுவர்கள் உள்ளிட்ட 10-க்கும் மேற் பட்ட வி.வி.மு. தோழர்கள் பிரச்சாரம் செய்தது சிறப்பான தொரு வரவேற்பைப் பெற்றது.


திருச்சியில்...

**திருச்சி** - உறையூர் பகுதியில் தெருநாய் ஒன்றைக் குளிப் பாட்டி, வேட்பாளரைப் போல வேட்டி - துண்டு - மாலை அணிவித்து தட்டு வண்டியில் அமர்த்தி, ''இதோ, உங்கள் வேட்பாளர் உங்களை நாடி வருகின்றார்'' என ஒலிபெருக்கி யில் அறிவித்து தாரை - தப்பட்டை முழங்க ஊர்வலமாக தோழர்கள் இழுத்து வந்தனர். விநோதமான இந்த வேட் பாளரை மக்கள் கூடி நின்று பார்த்து கை கொட்டி சிரித்தபோது ''நீங்கள் போடும் வாக்கு, நாய்க்கு போடும் வாக்குதான்; உலக வங்கியின் உத்தரவுக்கு விசுவாசமாக வாலாட்டுவது தான் ஓட்டுக் கட்சிகளின் வேலை'' என்று உரையாற்றிய தோழர்கள், போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டிய அவசியத்தை விளக்கினர். இந்த நூதன பிரச்சாரம் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றதோடு, புரட்சிகர அரசியலை மக்களின் நெஞ்சங்களில் விதைப்பதாக அமைந்தது.

**கோவை** மாவட்டத்தின் குடிநீர் ஆதாரமான பவானி ஆற்றை காகித ஆலை முதலாளிகளும் சாயப்பட்டறை அதி பர்களும் நஞ்சாக்கி நாசப்படுத்தும் கிரிமினல் நடவடிக் கையை எதிர்த்து, இப்பயங்கரவாதிகளை ஓட்டுச்சீட்டால் தண்டிக்க முடியாது; மக்கள் சர்வாதிகார மன்றங்கள் மூலம் தான் தண்டிக்க முடியும் என்பதை விளக்கி கோவை தோழர் கள் ''வேன்'' மூலம் தேக்கம்பட்டி, மேட்டுப்பாளையம், சத்தி யமங்கலம் வட்டாரங்களில் விரிவான பிரச்சார இயக்கத்தை நடத்தினர். உழைக்கும் மக்கள் இப்பிரச்சார இயக்கத்தை உற் சாகமாக வரவேற்று ஆதரித்ததோடு, தேர்தலைப் புறக்க ணித்து பயங்கரவாத முதலாளிகளை எதிர்த்துப் போராட உறு தியேற்றுள்ளனர்.

ஓட்டுப் பொறுக்கிக் குண்டர்களின் அச்சுறுத்தல்கள், போலீசின் அடக்குமுறை - கைதுகள் என அனைத்தையும் எதிர்கொண்டு, உழைக்கும் மக்களின் பேராதரவோடு புரட்சி கர அமைப்புகளின் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார இயக்கம் தமிழகமெங்கும் புரட்சிப் பயலாக வீசியுள்ளது. கோடிகோடியாய் வாரியி றைத்து ஓட்டுப் பொறுக்கிகள் நடத்திய ஆரவாரப் பிரச்சாரத் துடன் ஒப்பிடும்போது, இது மிகக் குறைவானதுதான் என் றாலும், இப்புரட்சிகர அரசி யல் பிரச்சாரம் மக்களிடம் ஏற் படுத்திய தாக்கம் மிக உயர் வானது.

– பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

# "மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!"

## - புரட்சிகர அமைப்புகளின் மே நாள் அறைகூவல்!

**மே** நாள் - அரசியல் ஆர்ப்பாட்ட நாள் என்பதை மறைத்து, கோலாகலத் திருவிழாவாக ஆண்டுதோறும் ஓட்டுப் பொறுக்கிகள் கொண்டாடி வருகின்றனர். இவ்வாண்டு தேர்தல் திருவிழா காரணமாக அந்த மே நாள் கொண்டாட்டத்தைக் கூட புறக்கணித்து விட்டனர். இந்நிலையில் "தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கும் பாசிச கருப்புச் சட்டங்களை முறியடிப்போம்! தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்துவோம்! உலக மேலாதிக்கப் போர்வெறி பிடித்த அமெரிக்க மேல்நிலை வல்லரசைத் தகர்த்தெறிவோம்!" என்ற மைய முழக்கங்களுடன் தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் மே நாள் ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் - பொதுக்கூட்டங்கள் மூலம் புரட்சிகர அரசியலை மக்களிடம் பிரச்சாரம் செய்தன.

ஓட்டுப் பொறுக்கிகளின் தேர்தல் திருவிழாவைக் காட்டி மே நாள் ஊர்வலம் நடத்தக் கூட அனுமதி மறுத்து பல பகுதிகளில் போலீசு அடாவடித்தனம் செய்தது. சட்டம் - ஒழுங்கு கெட்டுவிடும் என்று பல பகுதிகளில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுத்து திமிர்த்தனமாக நடந்து கொண்டது. இந்த உரிமை பறிப்புக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடி வாய்ப்புள்ள இடங்களில் மட்டுமே இப்புரட்சிகர அமைப்புகள் மே நாள் நிகழ்ச்சிகளை நடத்தின.

**தஞ்சையில்** தோழர் இராவணன் தலைமையில் சிவகங்கை பூங்காவிலிருந்து செங்கொடிகள் விண்ணில் உயர எழுச்சிமிகு முழக்கங்களுடன் புறப்பட்ட ஊர்வலம் பனகல் கட்டிடத்தின் அருகே முடிவடைந்தது. அங்கு தோழர் பரமானந்தம் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மறுகாலனியாக்கத்தை வீழ்த்த புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கி முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர்.

**சென்னையில்,** நகருக்குள் ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், செங்கற்சூளை - அரிசி ஆலைத் தொழிலாளர்கள் நிறைந்த புறநகரான செங்குன்றத்தில் பு.ஜ.தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் ஊர்வலமும், பேருந்து நிலையம் அருகே தெருமுனைக் கூட்டமும் நடந்தது. உழைக்கும் மக்கள் ஆர்வத்தோடு திரண்ட இக்கூட்டத்தில் தோழர் தங்கராசு மற்றும் தொழிற்சங்க முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர்.

**திருச்சியில்,** ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் தோழர்கள் மே நாளன்று காலை முதலே ஒவ்வொரு ஆட்டோ நிறுத்தத்திலும் செங்கொடி ஏற்றி முழக்கமிட்டு தெருமுனைக் கூட்டங்களை நடத்தினர். ஒவ்வொரு நிறுத்தத்திலிருந்தும் முழக்க அட்டைகள் - செங்கொடிகளுடன் ஆட்டோக்கள் ஊர்வலமாக அணிவகுத்து வந்த காட்சியும் உணர்வுபூர்வமாக நடந்த தெருமுனைக் கூட்டங்களும் உழைக்கும் மக்களை ஈர்ப்பதாக அமைந்தது. அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் முன்னணியாளர்களும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் இராசுவும் சிறப்புரையாற்றினர்.

**மதுரையில்,** மே நாள் ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், ஒத்தகடை அருகில் பு.மா.இ.மு. தோழர் இராமலிங்கம் தலைமையில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடந்தது. பின்னர், அன்று மாலை அதே பகுதியில் நடந்த தேர்தல் புறக்கணிப்பு விளக்கப் பொதுக்கூட்டத்தில் மறுகாலனியாக்கத்தின் கீழ் தொழிலாளர் உரிமை பறிபோவதைப் பற்றியும் புரட்சிக்கு அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கியும் தோழர்கள் காளியப்பன், சிவகாமு ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதன்பிறகு நடைபெற்ற ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது.

**கடலூரில்,** போலி கம்யூனிஸ்டுகள் மே நாளன்று கொடியேற்றுவதைக் கூட பறக்கணித்துவிட்டு ஓட்டுப் பொறுக்கிக் கொண்டிருந்தபோது, கட்டிடத் தொழிலாளிகள் - கூலித் தொழிலாளிகள் நிறைந்த கருமாரப்பேட்டை பகுதியில் பு.மா.இ.மு. தோழர்கள் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி கொடியேற்றியதோடு அந்நாள் முழுவதும் பல்வேறு இடங்களில் தொடர்ச்சியாக தெருமுனைக் கூட்டங்களை நடத்தி புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்தனர்.

**கோவையில்,** மே நாள் ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், தடையை மீறி பெண்கள் - குழந்தைகள் உள்ளிட்டு நூற்றுக்கணக்கான தோழர்கள் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் கண்ணப்பன் நகரிலிருந்து கணபதி-வேலன் திரையரங்கம் வரை ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தை இடைமறித்து கலைந்து செல்லுமாறு எச்சரித்த போலீசாரிடம், "மே நாளில் ஊர்வலம் நடத்துவது தொழிலாளர்களின் உரிமை" என்று வாதிட்டு உறுதி குலையாமல் ஊர்வலமாகச் சென்ற தோழர்கள், ஊர்வலத்தின் நிறைவாக ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். தடையை மீறி நடந்த இந்த எழுச்சிமிகு ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் பகுதிவாழ் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.



சென்னையில்

-பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com

# "இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன - மேல்சாதி வெறியை முறியடிப்போம்!"

## — தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டம்

**மை**ய அரசின் உதவி பெறும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.), இந்திய மேலாண்மைக் கழகம் (ஐ.ஐ.எம்), அனைத்திந்திய மருத்துவ அறிவியல்மையம் (எ.ஐ.ஐ.எம்.எஸ்), ஜிப்மர் முதலான உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத் தவிருப்பதாக மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன் சிங் அண்மையில் அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியான உடனேயே பார்ப்பன-மேல்சாதி வெறியர்கள் தலைநகர் டெல்லியில் கலகத்தைத் துவங்கி விட்டனர்.

காலங்காலமாக கல்வி, நிலவுடைமை, அரசு அதிகாரம் அனைத்தையும் ஏகபோகமாக அனுபவித்து வந்த பார்ப் பன-மேல்சாதி வெறியர்கள், அவையெல்லாம் சிறிது சிறிதாக பறி போவதால் வெறிகொண்டு அலைகிறார்கள். இந்தச் சாதிவெறிக் கும்பலுக்குப் பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவிக்கின் றனர். இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி, டாடா, மிட்டல் போன்ற தரகு முதலாளிகள், தகுதி-திறமை பற்றி மிகுந்த கவலையுடன் பேட்டியளிக்கின்றனர். தங்களின் கட்டுப்பாட் டில் உள்ள செய்தி ஊடகங்களின் மூலம், 'இடஒதுக்கீட்டி னால் இந்தியாவே அழிந்துவிடும்' என்ற மாயையை ஓயாமல் பிரச்சாரம் செய்கின்றனர்.

இந்நிலையில் பார்ப்பனத் திமிரை எதிர்த்தும், சமூகநீதி பேசும் ஓட்டுக் கட்சிகளின் சமரசத்தை அம்பலப்படுத்தியும் பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு பிரச்சாரம் செய்ததோடு, தமிழகத்தின் பல்வேறு நகரங்களி லும் 22.5.06 என்று ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து எழுச் சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

**சென்னையில்,** வள்ளுவர் கோட்டம் அருகே, பு.மா.இ.மு. இணைச் செயலர் தோழர் கணேசன் தலைமை யில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் "சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க" பொதுச் செயலர் டாக் டர் ஜி.ஆர்.இரவீந்தர்நாத் மற்றும் பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உட்பட பல்வேறு கல்லூரிகளின் மாணவர்க ளும் பங்கேற்றுச்சிறப்பித்தனர்.

**ஒசூரில்,** காந்தி சிலை அருகில் பு.ஜ.தொ.மு. தோழர் இர விச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தோழர் பரசுராமன், சின்னசாமி மற்றும் வி.வி.மு. பென்னாக ரம் வட்டச் செயலர் தோழர் அருண் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பார்ப்பன மேல்சாதி ஆதிக்க வெறியர்கள், மலம் அள்ளும் வேலைக்கும், பிணம் எரிக்கும் வேலைக்கும் இடஒதுக்கீடு கேட்பார்களா? அரசுதான் இடஒதுக்கீட்டைத் தீர்மானிக்குமா? என்று கண்டன உரையில் கேள்வி எழுப்பி யது பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

**நாமக்கலில்,** அண்ணாசிலை அருகில் வி.வி.மு. தோழர் அசோகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப் பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட திரளான உழைக்கும் மக்கள் கலந்து கொண்டனர்.

**கோவையில்,** செஞ்சிலுவை சங்கம் முன்பாக, பு.ஜ.தொ.மு. தோழர் விளவை இராமசாமி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் கார்க்கி மற்றும் ம.க.இ.க. கோவை கிளைச் செயலர் தோழர் மணிவண்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**திருச்சியில்,** சிந்தாமணி அண்ணாசிலை அருகில் பு.மா.இ.மு. திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் தண்ட பாணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ம.க.இ.க. திருச்சி கிளைத் தோழர் இராசா கண்டன உரையாற் றினர். மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்டு திரளான உழைக்கும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

**கடலூரில்** - உழவர் சந்தை அருகே பு.மா.இ.மு. தோழர் பாலு தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், விவசாயிகள் விடுதலை முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ஜெயகாந்த்சிங் கண்டன உரையாற்றினார். அரசுப் பணியாளர் சங்கத்தைச் சார்ந்தவர்கள், ஆசிரியர்கள், மாண வர்கள் என பல பிரிவைச் சார்ந்த உழைக்கும் மக்களும் ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நிதியளித்தும் உதவினர்.

**தஞ்சையில்,** பனகல் கட்டிடம் எதிரில் நடந்த ஆர்ப்பாட் டத்தில், ம.க.இ.க. தஞ்சைக் கிளைச் செயலர் தோழர் இரா வணன் தலைமையில் பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப் பாளர் தோழர் பரமானந்தம், ம.க.இ.க. மாநில இணைச் செய லர் தோழர் காளியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**மதுரையில்,** மேலமாசி வீதி - வடக்கு மாசி வீதி சந்திப் பில், காலை 11 மணியளவில், தோழர் கருணாமூர்த்தி தலை மையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டச் செயலர் தோழர் லயோனல் அந்தோணிராசு, உசிலை வி.வி.மு. தோழர்கள் குருசாமி, சிவ காமு, பு.மா.இ.மு தோழர் செந்தில் குமார் மற்றும் சிவகங்கை தோழர்கள் கண்டன உரையாற்றினர்.

**சாத்தூரில்,** வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 26.05.06 அன்று மாலை 5 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சாத்தூர் பகுதித் தோழர் கணேசன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டச் செயலர் லயோனல் அந்தோணி ராசு கண் டன உரையாற்றினர்.

கண்டன அறிக்கை, மனித சங்கிலி என்ற வரம்போடு அடையாள எதிர்ப்பு காட்டிவிட்டு சமூக நீதி பேசும் கட்சிகள் முடங்கிவிட்ட நிலையில், பார்ப்பனிய எதிர்ப்பை தமிழகமெங்கும் வீச்சாகக் கொண்டு சென்ற புரட்சிகர அமைப்புகளின் இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள்

# பங்குச் சந்தை வீழ்ச்சி தேசியத் துயரமா?

இந்திய நாட்டைச் சேர்ந்த பொது மக்களுக்கு, மே 22-ஆம் தேதி வழக்கம் போலவே விடிந்து, வழக்கம் போலவே முடிந்து போன சாதாரண நாள். ஆனால், பங்குச் சந்தை தரகர்களோ அந்த நாளை, ''கருப்பு திங்கட்கிழமை'' என அழைக்கிறார்கள். அன்றுதான், வீங்கிப் போய்க் கொண்டே இருந்த மும்பய் பங்குச் சந்தை, 1,100 புள்ளிகள் சரிந்து விழுந்தது. பங்குச்சந்தை சூதாட்டத்தின் தலைநகராக விளங்கும் அகமதாபாத்தில் திவாலான பங்குச் சந்தை வியாபாரிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க, அந்நகரிலுள்ள கங்காரியா ஏரியைச் சுற்றிலும் போலீசாரைக் குவிக்க வேண்டிய அளவிற்கு, இந்தச் சரிவு கடுமையாக இருந்தது. இந்தச் சரிவினால், முதலீட்டாளர்களுக்கு ஏறக்குறைய ஐந்து லட்சம் கோடி ரூபாய் நட்டமேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வழக்கம் போலவே, பெரிய முதலைகள் யாரும் இந்தச் சரிவினால் போண்டியாகிவிடவில்லை. நேரடியாகவும், பரஸ்பர நிதி நிறுவனங்களின் மூலமும் பங்குச் சந்தையில் முதலீடு செய்திருந்த நடுத்தர வர்க்கப் பேராசைக்காரர்களின் தலையில் தான் இந்த இடி இறங்கியது.

மும்பய் பங்குச் சந்தையின் வீக்கத்திற்கு எந்த அந்நிய நிதி நிறுவனங்கள் காரணமாக இருந்தனவோ, அவையே தான் இந்தச் சரிவுக்ும் காரணமாக இருந்தன. அமெரிக்க நாட்டில் வங்கிகளின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டதையடுத்து, இந்த நிதி நிறுவனங்கள் இந்திய பங்குச் சந்தையில் போட்டிருந்த முதலீட்டில் கணிசமான தொகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு பறந்து விட்டன.

இது ஒருபுறமிருக்க, பங்குச் சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அந்நிய நிதி நிறுவனங்கள் தங்களின் இலாபத்தில் வெறும் 10 சதவீதத்தைத்தான் வரியாக கட்டி வருகின்றன. சிறு முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தச் சலுகையை (இலாபத்தின் மீது 10 சதவீத வரி) அந்நிய நிதி நிறுவனங்களும் அனுபவித்து வருவதை ஏற்றுக் கொள்ளாத மைய அரசின் நேரடி வரி விதிப்பு வாரியம், ''சிறு முதலீட்டாளர்கள் யார்?'' என்பதைக் கண்டுபிடிப்பதற்குப் புதிய வரையறைகளைத் தயாரித்து, அதனைச் சுற்றறிக்கையாக அனுப்பியிருக்கிறது.

இந்த வரையறைகளின்படி அந்நிய நிதி நிறுவனங்கள் தினசரி வர்த்தகர்களாகக் கருதப்படுவதோடு, அந்நிறுவனங்கள் 30 சதவீதம் அளவிற்கு வரி கட்ட வேண்டியிருக்கும் என அந்தச் சுற்றறிக்கை சூசகமாகக் குறிப்பிட்டுள்ளதாம். இந்தச் சுற்றறிக்கைக்கு எதிர்வினையாக அந்நிய நிதி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு பங்குகளை விற்கத் தொடங்கியதையடுத்துதான் இந்தச் சரிவு ஏற்பட்டதாகப் பங்குச் சந்தை தரகர்களே கூறுகின்றனர்.

இந்தச் சரிவை ஏற்படுத்திய அந்நிய நிதி நிறுவனங்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், நிதியமைச்சர் ப.சிதம்பரமோ, ''நேரடி வரி விதிப்பு வாரியத்தின் சுற்றறிக்கைக்கும், அந்நிய நிதி நிறுவனங்களுக்கும் சம்பந்தம் கிடையாது'' என அறிக்கைவிட்டு, இந்தச் சரிவைத் தடுத்து நிறுத்த அந்நிய நிதி நிறுவனங்களின் காலைப் பிடித்தார்.

அந்நிய நிதி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு பங்குகளை விற்றதை, வெறும் வர்த்தக நடவடிக்கையாகப் பார்க்க முடியாது. அந்நிய நிதி நிறுவனங்களின் விருப்பத்திற்கு எதிராக எதையும் செய்யக் கூடாது என இந்திய அரசுக்கு அந்நிறுவனங்கள் வெளிப்படையாக விடுத்துள்ள மிரட்டல் இது. அன்று ஒரு கிழக்கிந்திய கம்பெனியின் மிரட்டலுக்கு அடிபணிந்து கிடந்த சுதேசி மன்னர்களைப் போல, இன்று அந்நிய நிதி நிறுவனங்களின் மிரட்டலுக்கு இந்த 'சுதேசி' ஆட்சியாளர்கள் அடிபணிந்து கிடக்கிறார்கள்.

மேலும், இந்த அந்நிய நிதி நிறுவனங்களின் விருப்பப்படி, ''முழு முதலீட்டு நாணய மாற்று'' என்ற நிதி சீர்திருத்தத்தை அமல்படுத்துவதற்கு மன்மோகன் சிங்கும், ப.சிதம்பரமும் துடியாய்த் துடிக்கிறார்கள். இந்தச் சீர்திருத்தம் ஏற்கெனவே நடைமுறைக்கு வந்திருந்தால், இந்தப் பங்குச் சந்தை சரிவையடுத்து, இந்திய நாடே போண்டியாகக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கும். இந்த நிதிச் சீர்திருத்தத்தைப் பயன்படுத்திதான், 1997-இல் தென் கிழக்காசி நாடுகளை, அந்நிய நிதி நிறுவனங்கள் போண்டியாக்கின. இப்பொழுது

விதர்பா பகுதியில் மே 9 அன்று தற்கொலை செய்து கொண்ட 10 விவசாயிகளுள் ஒருவரான கோசாலி பவாரின் மனைவி கமலாபாய் (நடுவில்).



www.padippakam.com

தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு தப்பியுள்ளது.

●●●

மேல்தட்டைச் சேர்ந்த வெறும் 2 சதவீத இந்தியர்கள்தான் பங்குச் சந்தையில் முதலீடு செய்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை, ஏதோ நாடே மூழ்கிவிட்டது போல, முதலாளித்துவ பத்திரிகைகள் துக்கம் தொண்டையை அடைக்க எழுதிக் குவித்தன. மும்பய் பங்குச் சந்தை சரிவதற்கு பன்னிரெண்டு நாட்களுக்கு முன்னதாக, மே 9-ஆம் தேதி, மகாராஷ்டிரா மாநிலம் விதர்பா பகுதியில் மட்டும், 10 பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனார்கள். இதனை எந்த 'தேசிய' பத்திரிகைகளிலாவது நீங்கள் படித்ததாக நினைவு கூற முடியுமா?

மைய அரசின் உணவுத்துறை அமைச்சர் சரத்பவார், 1998-க்கும் 2003-க்கும் இடைபட்ட ஐந்து ஆண்டுகளில் மட்டும், நாடெங்கிலும் ஒரு இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போயிருப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். பங்குச் சந்தை சரிவைப் பற்றி, ப.சிதம்பரத்தைக் கேள்விகளால் துளைத்து எடுத்துவிட்ட பத்திரிகையாளர்களுக்கு, இந்தத் தற்கொலைச் சாவுகள் தீண்டத்தகாதவை ஆகி விட்டன.

மும்பய் பங்குச் சந்தை அமைந்துள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பகுதியில் மட்டும், கடந்த ஒரே ஆண்டிற்குள் (ஜூன் 2005 தொடங்கி மே 2006-க்குள்) 520 பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அப்பகுதியில் கடந்த மூன்று மாதத்திற்குள் தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 220. தாராளமயத்தின் பின், விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் பற்றிய புள்ளி விவரத்தில் சரிவே ஏற்படவில்லை.


மும்பய் பங்குச் சந்தையின் சரிவைத் தடுத்து நிறுத்த, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கஜானாவைத் திறந்து வைத்திருப்பதாக அறிவித்தார், ப.சிதம்பரம். தங்கள் இலாபத்தின் மீது கூடுதல் வரி விதிக்கக் கூடாது என்ற பன்னாட்டு நிறுவனங்களின் மிரட்டலுக்கு, இந்திய அரசு உடனடியாக அடிபணிந்தது.



பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் போண்டியாகிப் போன ஒரு தரகர்.

ஆனால், சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ள இந்திய விவசாயிகள், ''தங்களுக்குக் குறைந்த வட்டியில் அரசாங்கம் கடன் கொடுக்க வேண்டும்; விதைகள், உரம், பூச்சி மருந்து ஆகிய உள்ளீடு பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும்; விவசாய விளை பொருட்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும்'' எனக் கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கோரி வருவது

மகாராஷ்டிரா மாநில அரசு நிவாரணமாகக் கொடுத்த எழுபத்தெட்டு ரூபாய்க்கான காசோலையைக் காட்டும் துளசிராம் சவான்.



மட்டும் இந்தச் ''செவிடர்களின்'' காதில் விழவில்லை.

விதர்பா பகுதியைச் சேர்ந்த 22 இலட்சம் விவசாயிகளுக்கு வங்கிகள், கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் கடன் தரப் போவதாக கடந்த ஆண்டு மகாராஷ்டிரா அரசு அறிவித்தது. இந்த ஆண்டோ, விதர்பா பகுதியைச் சேர்ந்த 12 இலட்சம் விவசாயிகளுள் 8 இலட்சம் விவசாயிகளுக்கு அரசாங்கக் கடன் தரப்போவதாக அறிவித்திருக்கிறது. மீதமுள்ள 4 இலட்சம் விவசாயிகள் யாரிடம் போய் கடன் வாங்குவது என்பது ஒருபுறமிருக்க, அரசாங்கமே 10 இலட்சம் பருத்தி விவசாயிகளை மாயமாய் மறையச் செய்துவிட்டது. அரசாங்கம் அறிவிக்கும் கடன் திட்டங்களே, பாதிக்கும் மேற்பட்ட விவசாயிகளைக் கந்து வட்டிக் கும்பலிடம் மாட்டி விடுகிறது என்பதே உண்மை.

விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளிவிடும் கந்துவட்டியை ஒழிக்க, மகாராஷ்டிரா அரசு புதிய சட்டமொன்றைக் கொண்டு வந்தது. இந்தச் சட்டம் உள்ளூர் அளவில் கடன் கொடுக்கும் சிறிய லேவாதேவிக்காரர்களை வளைத்துப் பிடித்ததே தவிர, பெரிய முதலைகளைக் கண்டு கொள்ளவேயில்லை. அதேசமயம், பருத்தி விவசாயிகளுக்கு அரசாங்கக் கடனும் கிடைக்காமல் போகவே, அவர்கள் புதிய வகையான கந்துவட்டிக் கும்பலிடம் மாட்டிக் கொண்டு முழிக்கிறார்கள்.

பருத்தி விவசாயிகளின் வீடு தேடி வந்து கடன் கொடுக்கும் இக்கந்து வட்டிக் கும்பலை, விவசாயிகள் ''அண்ணா'' என அன்போடு அழைக்கிறார்கள். ஆனால், இந்த ''அண்ணன்மார்கள்'' கடனை வசூலிப்பதில் தங்கள் ''தம்பிகளிடம்'' எள்ளளவும் கருணை காட்டுவதில்லை. பருத்தி விதைப்பு தொடங்கும் ஜூன் மாதத்தில், இந்த அண்ணன்களிடம் ரூ. 10,000/- கடன் வாங்கினால், அடுத்த ஆறு மாதத்திற்குள் ரூ. 15,000/- திருப்பித் தரவேண்டும். இல்லையென்றால், இந்த அண்ணன்மார்கள், விவசாயிகளின் நிலத்தையோ, உழவு மாடுகளையோ, வீட்டையோ - தங்களுக்குப் பிடித்திருப்பது எதையோ, அதை விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செய்து விடுவார்கள்.

இப்படி ஒரு கடன்காரக் கும்பலிடமிருந்து தப்பிக்க இன்னொரு கடன்கார கும்பலிடம் மாட்டிக்

www.padippakam.com

கொண்டு சாக வேண்டிய நிலைக்குப் போய்விட்டது, விவசாயிகளின் வாழ்க்கை. கடனில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது என்ற பெயரில், அவர்களைப் பிச்சைக்காரர்களைப் போல அவமானப்படுத்துகிறது, மகாராஷ்டிர மாநில அரசு. கோல்ஜாரி கிராமத்தைச் சேர்ந்த துளசிராம் சவான் என்ற விவசாயிக்குக் கிடைத்த நிவாரணம் 78 ரூபாய்தான். இந்தக் கிராமத்தில் வெறும் ஐந்து ரூபாயை நிவாரணமாகப் பெற்ற விவசாயிகள் கூட இருக்கிறார்கள் என்கிறார், அவர். இந்த 'நிவாரணத்தை'க் கூட அரசாங்கம் தனது சொந்தப் பணத்தில் இருந்து கொடுக்கவில்லை. விதர்பா விவசாயிகளிடமிருந்து பருத்தியைக் கொள்முதல் செய்தபொழுது பிடித்துக் கொண்ட பணத்தில் இருந்து கொடுத்துவிட்டு, தன்னைத் தர்மவானாகக் காட்டிக் கொள்கிறது, ஆளும் கும்பல்.


விவசாயிகளுக்கு வழங்கப்படும் இந்த அற்ப நிவாரணத்தோடு, பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் அரசாங்கம் கொடுக்கும் வரிச் சலுகைகளை ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுதுதான் இந்திய ஜனநாயகத்தின் உண்மை முகத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

பங்குச் சந்தை, தங்க நாற்கரணச் சாலை, மேம்பாலங்கள் தகவல் - தொழில் நுட்ப பூங்காங்கள் ஆகியவற்றின் மினுமினுப்பில் விவசாயிகளின் துயரம் நிறைந்த வாழ்க்கை மூடிமறைக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் கடன் வாங்கி, அதில் இருந்து மீள முடியாமல் தவிக்கும் விவசாயிகளின் துயரம், அவர்களது சொந்தத் துயரம் போலவும்; மேட்டுக்குடி - பங்குச் சந்தை சூதாட்டக் காரர்களுக்கு ஏற்படும் நட்டம் தேசியத் துயரம் போலவும் சித்தரிக்கப்படுவதை விட, மோசடித்தனம் வேறெதுவும் இருக்க முடியுமா?

● குப்பன்

# பார்ப்பனத் திமிருக்கு எதிராக கலகத்தில் இறங்கிய புரட்சிகர அமைப்புகள்

“இட ஒதுக்கீடு எதிர்ப்புப் போரில் தமிழகமும் குதிக்கிறது; 25.5.06 அன்று சென்னை - வாலாஜா சாலை அருகே ஆர்ப்பாட்டம்; சமத்துவத்துக்காகக் குரல் கொடுக்க அணிதிரளுங்கள்” என்று இரு நாட்களுக்கு முன்னதாகவே பார்ப்பன-மேல்சாதி வெறிக் கும்பல், இணையதளம் மூலமாகவும் ஈ-மெயில் மூலமாகவும் செல்ஃபோன்களுக்கு குறுந்தகவல் அனுப்பியும் மேட்டுக்குடியினரை நூதனமுறையில் பிரச்சாரம் செய்து அணிதிரட்டியது. பெரியார் பிறந்த மண்ணில் மீண்டும் தலைதூக்கும் இப்பார்ப்பன-மேல்சாதிவெறிக் கும்பலின் திமிரை அடக்கும் நோக்கத்துடன், இந்த வக்கிர ஆர்ப்பாட்டத்தை எதிர்த்தும் பார்ப்பனக் கும்பலின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தியும், பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கு முதல்நாளே அண்ணா சாலை-வாலாஜா சாலையிலும் இவ்வழியாகச் செல்லும் பேருந்துகளிலும் சுவரொட்டி பிரச்சாரத்தை நடத்தின. 25.5.06 அன்று பார்ப்பன-மேல்சாதிவெறி மாணவர்கள் நடத்தவிருந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னரே அங்கு செங்கொடி ஏந்தி செஞ்சட்டையுடன் சென்ற தோழர்கள், அப்பகுதியெங்கும் இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன - மேல் சாதி வெறியர்களை அம்பலப் படுத்தும் பிரசுரங்களை விநியோகித்து பிரச்சாரம் செய்தனர். இந்த வக்கிர ஆர்ப்பாட்டத்தை முற்றுகையிட்டு எதிர்முழக்கமிடத் தீர்மானித்து தோழர்கள் முன்னேறிச் சென்றதும், தோழர்களைக் கைது செய்த போலீசு, அவர்களைத் திருவல்லிக் கேணி போலீசு நிலையத்துக்கு கொண்டு சென்றது.



அங்கு உளவுத்துறை, கியூ பிராஞ்ச் போலீசு அதிகாரிகள் தோழர்களை சூழ்ந்து கொண்டு “இன்னும் எத்தனை பேர் வந்துள்ளீர்கள்? என்ன செய்யத் திட்டமிட்டுள்ளீர்கள்” என்றெல்லாம் பீதியுடன் கேட்டு விசாரித்துவிட்டு, பார்ப்பனக் கும்பலின் ஆர்ப்பாட்ட சடங்கு முடிந்ததும் அனைவரையும் விடுவித்தனர்.

ஏறத்தாழ 50 பேர் கூட இல்லாத மேட்டுக்குடி மாணவர்கள் - அதிலும் பெரும்பாலானவர்கள் வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் - ஆங்கிலத்தில் முழக்கமிட்டுக் கொண்டு கோமாளித்தனமாக நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தை பார்ப்பன பத்திரிகைகள் ஊதிப் பெருக்கி, ஏதோ மிகப் பெரிய போராட்டம் போல கொட்டை எழுத்தில் படத்துடன் செய்தியை வெளியிட்டன. வடநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்கள் ஈறைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கி ஒளிபரப்பின. 'சூத்திர' கருணாநிதி ஆட்சியோ, இப்பார்ப்பனக் கும்பலின் வக்கிரமான ஆர்ப்பாட்டத்துக்குத் தடைவிதிக்காமல் அனுமதி கொடுத்ததோடு, 300-க்கும் மேற்பட்ட போலீசைக் குவித்து பாதுகாப்பு கொடுத்து 'ஜனநாயக சேவை' செய்தது. சமூக நீதி பேசும் ஓட்டுக் கட்சிகளும் இயக்கங்களும் பார்ப்பன - மேல்சாதி வெறியர்களின் திமிருக்கு எதிராக களத்தில் நின்று போராடாமல் ஒதுங்கியிருந்த நிலையில், புரட்சிகர அமைப்புகள் நடத்திய இந்தக் கலகம் உழைக்கும் மக்களிடமும் மாணவர்களிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

- பு.ஜ. செய்தியாளர்கள்.


படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அக்கறை காட்டாமல் அலட்சியமாக நடந்து கொண்ட கோட்டாட்சியர், முகாசபரூர் - தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட வாக்குச் சாவடியில் ஒரு வாக்குகூடப் பதிவாகவில்லை என்பதைக் கேள்விப்பட்டு பதறிப் போய், மக்களைச் சமாதானப்படுத்தி, ஓட்டுப் போட வைக்க குடிநீர் வடிகால் வாரிய கீழ்நிலை அதிகாரியை அனுப்பி வைத்தார். அந்த அதிகாரியோடு ஒட்டிக் கொண்டு வந்த தி.மு.க.வைச் சேர்ந்த விருத்தாசலம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குழந்தை தமிழரசன் தாழ்த்தப்பட்ட மக்களை மூளைச் சலவை செய்ய முயன்றார்.

அதிகார வர்க்கத்தின் இந்த முயற்சியைக் கேள்விபட்ட தோழர்கள், முகாசபரூருக்குச் சென்று, மக்கள் முன்னிலையிலேயே, ''தாழ்த்தப்பட்ட மக்கள் வாந்தி-பேதியால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடியபொழுது வராத நீங்கள்; குடிநீரில் நஞ்சு கலந்த சாதி வெறியர்களைக் கைது செய்யக் கோரிய தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்திய நீங்கள், இப்பொழுது வந்து, அவர்களை ஓட்டுப் போடச் சொல்வதற்கு என்ன உரிமை இருக்கிறது?'' என அம்பலப்படுத்தினர். அதுவரை அன்பாகப் பேசிய குழந்தை தமிழரசன், ''ஓட்டுப் போடாவிட்டால், என்னிடமிருந்தோ, அரசிடமிருந்தோ எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது'' என மிரட்டவே, தாழ்த்தப்பட்ட மக்களே அவரை விரட்டியடித்தனர்.

இவர்கள் ஓடிப் போன பிறகு, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வந்தார். ''மக்களை முதலில் ஓட்டுப் போடச் சொல்லுங்கள்; மற்றதை பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என நைச்சியமாகப் பேசினார். பகுதி தோழர்களோ, ''முதலில் குடிநீரில் நஞ்சு கலக்கப்பட்டது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யுங்கள்; ஓட்டுப் போடுவதா, வேண்டாமா என்பதை அதன்பிறகு மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்'' என உறுதியாகக் கூறிவிட்டனர். வழக்குப் பதிவு செய்யாமல், மக்களைச் சமாதானப்படுத்த முடியாது எனப் புரிந்து கொண்ட போலீசு கண்காணிப்பாளர், கிராம நிர்வாக அதிகாரியிடம் புகாரைப் பெற்று வழக்குப் பதிவு செய்ததோடு, இச்சம்பவம் பற்றி போலீசு துணை கண்காணிப்பாளர் தேர்தல் முடிந்த மறுநாளே விசாரணை நடத்துவார் என்றும் அறிவித்தார்.



**தேர்தலைப் புறக்கணிப்பவர்களை எப்படியாவது சமாதானப்படுத்தி வாக்களிக்க வைக்கும் நோக்கத்தோடு வந்த அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்டு போராடும் தாழ்த்தப்பட்ட மக்கள்.**

இந்தச் சமயத்தில், ஓட்டுப் பொறுக்கி அரசியலில் புதிய வரவான விருத்தாசலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் விஜயகாந்த் வந்தார். சம்பவத்தைக் கேட்டுக் கொண்டு அவருக்கு, சினிமாத்தனமான ஆத்திரம் கூட வரவில்லை. மாறாக, மக்களை அமைதியாக இருக்கும்படி ஊமை ஜாடை காட்டிவிட்டுப் பறந்து போனார்.

மற்ற ஓட்டுக் கட்சிகளை விடுங்கள், தாழ்த்தப்பட்டவர்களின் ஒரே பிரதிநிதி என்று தங்களைக் கூறிக் கொள்ளும் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கூட, இந்தச் சம்பவம் பற்றிக் கடுகளவும் அக்கறை காட்டவில்லை. எல்லாம் முடிந்தபின், அவர்கள் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றுள்ள ''தலித் வரலாற்றாசிரியர்'' ரவிக்குமாரை வைத்து, இச்சம்பவம் பற்றி ''ஆழமாக'' ஆய்வு நடத்தலாம் என விடுதலைச் சிறுத்தைகள் எண்ணியிருக்கலாம். பார்ப்பன - பாசிச ஜெயாவோடு கூட்டணி வைத்துக் கொள்ளும் அளவிற்கு ஓட்டுப் பொறுக்கி அரசியலில் வளர்ந்து விட்ட விடுதலைச் சிறுத்தைகளிடம், தாழ்த்தப்பட்டவர்கள் இந்தத் துரோகத்தைத் தவிர வேறெதைப் பெற முடியும்?

சட்டசபைத் தேர்தல்கள் முடிவு வெளியாகி, புதிய அரசு அமைந்து மூன்று வாரங்கள் ஓடிப் போய் விட்டன. எனினும், நஞ்சு கலந்த குடிநீரை எடுத்து ஆய்வகப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தபின் கிடைத்த முடிவுகளைக் கூட அதிகார வர்க்கம் வெளியிட மறுத்து வருகிறார்கள். இதன் மூலம், அவர்கள் உண்மையை மூடி மறைக்க முயலுகிறார்கள். உண்மையை மூடி மறைப்பதன் மூலம், தாழ்த்தப்பட்ட மக்கள் குற்றஞ்சுமத்துவது போல, அதிகார வர்க்கம் வன்னிய சாதி வெறியர்களைக் காப்பாற்ற முயலுகிறார்கள் என்ற முடிவுக்குத்தான் எவரும் வரமுடியும். அதேசமயம், முகாசபரூர் தாழ்த்தப்பட்ட மக்களோ, குடிநீரில் நஞ்சைக் கலந்த வன்னிய சாதி வெறியர்களைத் தண்டிக்கக் கோரித் தீவிரமாகப் போராடினால், அது மேலும் தங்களுக்கு ஆபத்தாக முடிந்துவிடுமோ என அஞ்சுகிறார்கள்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் ஓட்டுக் கட்சிகள், போலீசு, அதிகாரவர்க்கம் அனைத்தும் உழைக்கும் ஏழை மக்களை, உணர்வும், உரிமையும் கொண்ட மனிதர்களாக, குடிமக்களாகப் பார்ப்பதற்குப் பதில், வெறும் ஓட்டுப் போடும் ஜடங்களாகத் தான் நடத்துவார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் இன்னுமொரு சான்று. இந்த உண்மையை உணர்த்தி, தாழ்த்தப்பட்டோரையும், பிற உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி, வன்னிய சாதி வெறியர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும்; அவர்களைச் சட்டப்படி தண்டிக்கவும் கோரும் போராட்டங்களை நடத்துவதற்கு வி.வி.மு. முயன்று வருகிறது.

**தகவல்:**
**வி.வி.மு., விருத்தாசலம் வட்டம்.**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER No: 42648/85

Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன-மேல்சாதி வெறியை எதிர்த்து

தமிழகமெங்கும்
புரட்சிகர அமைப்புகள்
22.5.06 அன்று நடத்திய

# ஆர்ப்பாட்டம்

ஐ.ஐ.டி. படிச்சிப்புட்டு அமெரிக்கா போற –
அங்கே பில்கேட்சு கால நக்கி 'திறமை'யிங்கிற!
மக்களோட வரிப்பணத்தில் டாக்டராகுற
மறுநாளே லண்டனுக்கு ஃபிலைட்டு ஏறுற!
இந்த தேசத்துரோக வேலையைத்தான்
திறமையிங்கிற
இட ஒதுக்கீடு என்றதுமே ஏண்டா குதிக்கிற!

என்ஜினியர் வரைபடத்தில் குடியிருக்க முடியுமா–
எங்க கொத்தனாரைக் கூப்பிடாம
கோடு வீடு ஆகுமா?
தெறம என்ன தெறம கழுத உனக்கு மட்டும்
சொந்தமா?
கம்ப்யூட்டரில் நாத்து நட்டு அறுத்துக்காட்ட
முடியுமா?


ஓசூரில்...


தஞ்சையில்...


கடலூரில்...


மதுரையில்...


திருச்சியில்...


சென்னையில்...


கோவையில்...